## உள்ளே உள்ளவை


1. பயணத்தின் பயன் ... 05
2. பிரயாணத்தின் நோக்கம் ... 10
3. புறப்படும் போது ... 24
4. தேவைப்படுபவை ... 36
5. பிரயாணத்தின் சலுகை ... 38
6. பிரயாணத்தின் குறுக்கீடு ... 56


# பயணத்தின் பயன்

தெளிவான ஞானத்தின் உதவியால் இறையன்பர்களுக்குத் தீர்க்கக் கண்ணோட்டத்தைக் கொடுத்த இறைவனே! உள்ளூரிலும் வெளியூரிலும் அவர்கள் கண்ட அதிசயங்களை வைத்து அவர்களின் உள்ளங்களில் ஆழமான இறை நம்பிக்கையைத் தோற்றுவித்த ஆண்டவனே! உன்னை நான் பாராட்டுகிறேன். பாராட்டு என்னும் பெயரில் வரக்கூடிய அத்தனைக்கும் நீயே உரித்தானவன்.

நீ வகுத்துக் கொடுத்த வழியில் நடக்கும் இறையன்பர்கள் உன்னுடைய தீர்ப்பை முழு மனத்துடன் ஏற்றுக் கொள்கிறார்கள். அவர்கள் உள்ளூருக்கும் வெளியூருக்குமிடையில் பாகுபாடு செய்வதில்லை; கரைக்கும் கடலுக்குமிடையே வித்தியாசம் பார்ப்பதில்லை.

என்றைக்கும் குறையாத உன் அன்பு பெருமானார் (ஸல்) அவர்களுக்கும் நபித்தோழர்களுக்கும் நபிப் பரம்பரையினருக்கும் உரித்தாகட்டும்!

தன் குறிக்கோளை அடையும் துணிவுடன் மனிதன் பிரயாணம் செய்கிறான்; அல்லது தனக்குப் பிடிக்காத ஒரு சூழலிலிருந்து தப்புவதற்காகப் பிரயாணப்படுகிறான். ஆனால், இப்போது நம்முடைய கவனத்திற்கு வந்திருப்பது வேறொரு பிரச்சினை. இந்த வகையில் பார்க்கும்போது, பிரயாணத்தை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கலாம். ஒன்று, உள்ளூரை விட்டுக் காடு மலைகளைக் கடந்து வெளியூருக்குச் செல்லும் பிரயாணம். இதனை உடற்பிரயாணம் என்று குறிப்பிடலாம். மற்றொன்று, அடித்தளத்தில் கிடக்கும் மானிட உள்ளம் உயர்ந்த நிலையை நோக்கி முன்னேறும் பிரயாணம். இதனை மனப்பிரயாணம் என்று குறிப்பிடலாம்.

இந்த இரண்டிலும் பிந்தியதே சிறப்பு வாய்ந்தது. உடலைவிட உள்ளம் சிறப்புமிக்கது. எனவே உடலின் பிரயாணத்தைவிட உள்ளத்தின் பிரயாணம் சிறப்பு வாய்ந்ததாகத்தான் இருக்கவேண்டும். இது முக்கியமானதொரு பிரயாணம் என்பதையும் நாம் மறுப்பதற்கில்லை.

உங்கள் உள்ளம் படிப்படியாக வளர்ந்து கொண்டிருக்கிறது. அன்னையின் வயிற்றிலிருந்து நீங்கள் மண்ணுக்கு வந்த நேரத்தில் எப்படி இருந்தீர்களோ அப்படித்தான் இப்போதும் இருக்கிறீர்கள் என்று யாராலும் சொல்ல முடியாது.

அந்த ஆரம்ப நிலையைக் கொஞ்சம் எண்ணிப் பார்த்தால், உங்கள் உள்ளத்தின் நிலை நன்றாகத் தெரிந்து விடும்.

இந்த மனப்பிரயாணம் மற்ற எந்தப் பிரயாணத்தையும் விடக் கடினமானது என்று நான் சொல்ல வேண்டிய



தில்லை. அதை நீங்களே தெரிந்துகொள்ளலாம். இந்த வழியில் பிரயாணப்பட்டவர்கள் எழுதி வைத்திருந்த குறிப்புகள் எல்லாம் இன்றைக்கு அழிந்து போய்விட்டன. இந்தப் பிரயாணத்தில் பெரும்பாலோர் ஈடுபடாததால், மனப்பிரயாணதிற்கு நீங்கள் தயாராகும்போது உங்களுக்கு நல்ல பிரயாணத்துணை கிடைக்க முடியாது. 'போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்ற உறுதியுடன் பிரயாணப்பட்ட நமது முன்னோர் உங்களுக்கு வழிகாட்டிகளாக இருக்கலாம். அவர்கள் இந்த வழியில் கண்ட அனுபவங்கள் எழுத்தில் அடங்காதவை; அவர்கள் பெற்ற முன்னேற்றம் வர்ணனைக்கு அப்பாற்பட்டது.

கண்ணில் பட்டவை அனைத்திலும் அவர்கள் அருமையான பல அறிவுரைகளைப் பார்த்தார்கள். விண்ணிலும், மண்ணிலும் அவர்கள் இறைவனின் அற்புதங்களைக் கண்டார்கள்.

''அவர்களிடத்திலேயும் விண்வெளியிலேயும் நாம் அவர்களுக்கு அறிகுறிகளைக் காட்டுவோம்'' என்று திருக்குர்ஆன் குறிப்பிடுகிறது.

''நம்பிக்கை கொள்கிறவர்களுக்கு மண்ணகத்தில் ஆதாரங்கள் இருக்கின்றன. அவர்களிடமே அவை இருக்கின்றன. நீங்கள் பார்க்கக்கூடாதா!'' என்று பிறிதோரிடத்தில் திருக்குர்ஆன் கேட்கிறது.

இப்படி மனிதனின் சிந்தனையை உயர்ந்த நிலைக்குக் கொண்டுபோகும் கருத்துக்கள் திருக்குர்ஆனில் இறைந்து கிடக்கின்றன. அவற்றை ஊடுருவிப் பார்க்காதவர்கள்

ஆத்மீகத் துறைக்கு அருகதையற்றவர்கள். அவர்களால் இந்தப் பிரயாணத்தை மேற்கொள்ளமுடியாது; மேற் கொண்டாலும் வெற்றிகாண முடியாது.

இந்த மனப்பிரயாணத்தை மேற்கொள்கிறவர்கள் உண்மையிலேயே பாக்கியசாலிகள்தாம். அவர்கள் தம் வீட்டிலேயே உட்கார்ந்துகொண்டு அகிலமனைத்தையும் சுற்றிப் பார்க்கலாம். இதில் எவ்வளவு ஆழமாக ஈடுபடு கிறீர்களோ அவ்வளவு அதிகமான நன்மைகளை நீங்கள் அடையலாம். இந்த நன்மைகள் உங்களுக்கு எப்போதும் கிடைக்கலாம். இறைவன் இதில் கஞ்சத்தனம் காட்டுவ தில்லை. இது உங்களுக்குத் தொடர்ந்து கிடைக்கும்; நீங்கள் சந்தேகப்பட வேண்டியதில்லை.

ஆனால், உங்கள் மனத்தில் களங்கம் ஏற்படக்கூடாது. இல்லையேல் குறிக்கிடும் விளைவுகளை நீங்கள்தான் சமாளித்தாக வேண்டும். எந்த விளைவுக்கும் நீங்கள்தான் காரணம். உங்கள் மனநிலையை நீங்கள் மாற்றிக் கொள்ளாதவரை இறைவன் தன் அருட்கொடைகளை மாற்றிக்கொள்வதில்லை.

நீங்கள் தப்பான எண்ணத்தை மனத்தில் வைத்திருந் தால், இறைவன் உங்கள் உள்ளத்தை இருளடையச் செய்துவிடுவான். எனவே, தப்பான கண்ணோட் டத்துடன் இந்த வழியில் பிரவேசிக்கிறவர்கள் தமக் குத்தாமே பாதகம் இழைத்துக் கொண்டவர்கள் ஆவார்கள்.

மனப்பிரயாணத்திற்கு மட்டுமின்றி, எந்தப் பிரயாணத் திற்கும் இந்த உண்மை பொருந்தும். பிரயாணப்படு கிறவர்கள் உயர்ந்த லட்சியத்தைக் குறியாகக் கொண் டிருக்க வேண்டும். இல்லையேல் அந்தப் பிரயாணத்தி னால் நன்மையைவிடத் தீமையே அதிகமாக உருவாகும்.



நீங்கள் அறிவைத் தேடிப் பிரயாணப்படுகிறீர்களா? அப்படியானால் நீங்களும் பாராட்டுக்குரியவர்தாம். இறைவழி நடப்பவர்களின் பட்டியலில் உங்கள் பெயரும் இடம் பெற முடியும்.

இந்தப் பிரயாணத்திற்குப் பல ஷரத்துகள் இருக் கின்றன. அவற்றைப் பேணிக்காத்தால் உங்களுக்குப் பெருமை கிடைக்கும்; புறக்கணித்தால் நிந்தனை கிடைக்கும்.

# 2. பிரயாணத்தின் நோக்கம்

பிரயாணத்தில் பல நன்மைகள் இருக்கின்றன. அதேபோன்று பல தீமைகளும் இருக்கின்றன.

ஒரு மனிதன் உள்ளூரைவிட்டு எதற்காகப் பிரயாணப் படுகிறான் என்பதை நாம் முதலில் பார்ப்போம்.

அறிவைத் தேடி ஒருவன் வெளியூருக்குப் புறப்படலாம். இந்தப் பிரயாணம் எத்தகையது என்பதை, அவன் தேடும் அறிவின் தரத்தை வைத்துத் தான் தீர்மானிக்க வேண்டும். அவசியமான அறிவுக்காகப் பிரயாணப்பட்டால், அவன் பிரயாணம் அவசியமானது. தேவையற்ற அறிவுக்காகப் பிரயாணப்பட்டால், அவன் பிரயாணம் தேவையற்றது.

நல்லறிவுக்காகப் பிரயாணப்படுகிறவர்களைப் பெருமானார் (ஸல்) அவர்கள் பாராட்டுகிறார்கள்.

''அறிவைத் தேடிக் கொண்டு ஒருவன் தன் வீட்டை விட்டுப் புறப்பட்டால், திரும்பி வரும்வரை அவன் இறைவழியில் இருக்கிறான்.''

மீண்டும் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறு கிறார்கள்: ''ஒருவன் அறிவுப் பாதையில் ஈடுபட்டால் மறுமைக்குரிய பாதையை அவனுக்கு இறைவன் சுலபமாக்குவான்.''



நபிக் கருத்து ஒன்றைத் தெரிந்துகொள்வதற்காக சயீத் பின் முசய்யப் என்ற நபித்தோழர் நீண்ட நாள் பிரயாணம் செய்தாராம்.

''ஒரே ஓர் அறிவுரையைத் தெரிந்துகொள்வதற்காக ஒருவன் சிரியாவிலிருந்து யமன் தேசத்தின் கடைசி எல்லைவரைப் பிரயாணம் செய்தாலும், அவனுடைய பிரயாணத்தை வீணானது என்று சொல்ல முடியாது'' என்று கூறுகிறார் அறிஞர் ஷுஅபீ.

பெருமானார் (ஸல்) அவர்கள் பற்றிய வாழ்க்கைக் குறிப்பு ஒன்றைத் தெரிந்து கொள்வதற்காக ஜாபிர் பின் அப்துல்லாஹ் நபித் தோழர்கள் பத்துப் பேருடன் மதீனாவிலிருந்து எகிப்து வரை பிரயாணம் செய்தார் என்று வரலாறு கூறுகிறது.

அந்தக் காலத்தில் மட்டுமின்றி, இந்தக் காலத்திலும் அறிவைத் தேடும் நோக்கத்துடன் பிரயாணம் மேற் கொள்ளப்படுகிறது என்பதை யாரும் மறுப்பதற் கில்லை.

அறிவு பல வகைப்படும். மனத்தைத் தூய்மைப் படுத்துவது எப்படி என்று தெரிந்து கொள்வதும் அறிவு தான். இதனைச் சிறந்த அறிவு என்றும் குறிப்பிடலாம். மனத்தைத் தூய்மைப்படுத்தாதவர்கள் முன்னேற்றமில்லா மல் தேங்கி நிற்க வேண்டியவர்களே. அவர்களால் ஆத்மீகப் பாதையில் நடக்க முடியாது.

எனவே உங்களிடமுள்ள நற்குணங்களையும் தீக் குணங்களையும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். அப்படித் தெரிந்துகொள்ளவில்லை என்றால், உங்கள் மனத்தை உங்களால் தூய்மைப்படுத்த முடியாது.

இப்படி மனத்தைத் தூய்மைப்படுத்துவதையும் நான் பிரயாணம் என்று குறிப்பிட்டேனல்லவா? இந்த மனப் பிரயாணம் ஒரு மனிதனை மிகத் தாழ்ந்த நிலையிலிருந்து மிக உயர்ந்த நிலைக்கு அழைத்துச் செல்கிறது. அறிவைத் தேடிப் பிரயாணம் செய்கிறவர்கள் இதை என்றைக்கும் மறந்து விடக்கூடாது. ஆனால் ஒன்று: நீங்கள் எந்த நோக்கத்துடன் பிரயாணப்பட்டாலும், உங்கள் பிரயாணம் உங்கள் மனப் பரப்பில் ஏதேனும் ஒரு முன்னேற்றத்தை நிச்சயமாக உருவாக்கும்.

இதனால் தான் அறிஞர் பிஷ்ர் இப்படிக் கூறினார்: ''நீங்கள் பிரயாணம் செய்து பாருங்கள். நீங்கள் மணம் பெற்று விடுவீர்கள். உங்கள் குணம் சிறப்புப் பெற்று விடும். ஏனெனில் ஓடிக் கொண்டிருக்கும் தண்ணீர் எப்போதும் சுத்தமாகத்தான் இருக்கும். அது ஒரே இடத்தில் தேங்கிக் கிடந்தால் நாற்றமெடுக்கும்!''

உள்ளூரில் இருக்கும் மனிதனால் தன்னிடமுள்ள தீய குணங்களை எளிதில் கண்டுபிடிக்க முடியாது. அன்புள்ள வர்களோடு அவன் பழகுகிறான். அவன் தவறாக நடந்தால் மற்றவர்கள் நட்புக்காக மன்னித்துவிடு கிறார்கள். ஆனால் பிரயாணத்தில் இது சாத்தியமில்லை. பரிச்சயமானவர்களை அடிக்கடி பார்க்க முடியாது. சூழலுக்குத் தக்கவாறு தன் குணத்தை மாற்றிக் கொள்ள வேண்டி ஏற்படும். பிரயாணத்திலுள்ள சிரமங்கள் அவனுக்கும் அவனுடைய மனத்துக்குமிடையிலுள்ள திரையைக் கிழித்தெறிந்துவிடும். எனவே பிரயாணத்தின் போது ஒருவன் தன்னிடமுள்ள தீக் குணங்களைத் தெளிவாகத் தெரிந்து கொள்வதற்குரிய சந்தர்ப்பம் உருவாகிறது. அவன் தன்னிடமுள்ள தீக்குணங்களைத்



தெரிந்துகொண்ட பின்னர் அவற்றைக் களைவதற்குரிய வழியில் பிரவேசிக்கலாம்.

இப்படிப் பார்க்கும்போது பிரயாணத்தில் உங்களுக்கு மகத்தான நன்மையுண்டு.

இறைவனைச் சுட்டிக்காட்டும் அறிவுகள் உலகம் முழுவதும் இறைந்து கிடக்கின்றன. ஊடுருவிப் பார்க்கிற வர்களுக்கு அவை உயர்ந்த படிப்பினைகளைக் கொடுக் கின்றன. உலகிலுள்ள பொருள்கள் அத்தனையும் இறைவ னுக்குச் சரியான விளக்கம் கொடுக்கின்றன. இந்த உண்மையைத் தெளிந்த மனமும் தூய்மையான கண் ணோட்டமும் பெற்ற சிலரே தெரிந்து கொள்கிறார்கள். மற்றவர்கள் கண்டும் காணாததுபோல் குருடர்களாக வாழ்கிறார்கள். திருக்குர்ஆன் கூறுவது போல், அவர்கள் உலக வாழ்வின் வெளித் தோற்றத்தை மட்டுமே பார்க் கிறார்கள். மறுமையின் வாழ்வை அவர்கள் நினைத்துப் பார்ப்பதில்லை.

இவர்களுக்குத் தெளிவான கண்கள் இருக்கின்றன; பழுதுபடாத காதுகள் இருக்கின்றன. இந்தப் புறக்கண்கள் வெளிப்படையான தோற்றத்தைப் பார்க்கின்றன. புறச் செவிகள், மிருகம்கூடக் கேட்கும் வார்த்தைகளையே கேட்கின்றன. இவை நிச்சயமாக மனிதனுக்குப் பெருமை யைக் கொடுக்க முடியாது. ஏனெனில் இத்தகைய கண்களும் காதுகளும் மிருகங்களுக்கும் இருக்கின்றன.

மனிதனுக்குப் பெருமையைக் கொடுப்பது மனக்கண், அவனுக்கு மதிப்பைக் கொடுப்பது மனச்செவி. இந்தச் செவிதான் சுவரிலுள்ள ஆணியின் குரலைக் கேட்கிறது. மனக் கண்ணும் மனச் செவியும் பெற்றவர்கள்

உலகத்திலுள்ள பொருள்கள் எல்லாவற்றையும் ஊடுருவிப் பார்க்கிறார்கள்; அவற்றின் பேச்சைக் கேட்கிறார்கள். தம் ஆற்றலை அவர்கள் இப்படி வியாக்கியானம் செய்தார்கள்:

ஆணியைப் பார்த்துச் சுவர் கேட்டது: ''ஏன் எனக்குத் தொல்லை கொடுக்கிறாய்?''

ஆணி சொன்னது: ''நான் என்ன செய்யட்டும்? என்னைக் கருவியாக வைத்து உனக்கு ஒரு மனிதன் தொல்லை கொடுக்கிறான், அவனைக் கேள்...''

இப்படி அவர்கள் எழுதி வைத்திருக்கும் வரிகள் பெரும்பாலோரை இன்றைக்கும் குழப்புகின்றன. ஏனெனில் அவர்கள் மனக் கண்ணைத் திறந்து பார்ப்பதில்லை. மனச் செவியை உபயோகித்துக் கேட்பதில்லை. அதாவது - அவர்கள் மனப்பிரயாணத்தில் இன்னும் ஈடுபடவில்லை. வார்த்தைகளைக் கட்டிக்கொண்டு மாரடிக்கும் அவர்கள் கருத்துக்களைத் துளைத்துப் பார்க்கத் தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த ஆற்றல் எல்லோருக்கும் கிடைத்துவிட்டால் சுலைமான் நபிக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கண்ணியம் குறைந்துபோகும். ஏனெனில், அவர்களைப் போலவே நீங்களும் பறவை இனத்தின் மொழியைத் தெரிந்து கொள்ளலாம்.

இறைவனின் பேச்சைக் கேட்ட மூஸா நபிக்கு ஒரு சிறப்பு இருக்கிறதல்லவா? இதுவும் குறைந்துபோய் விடும், மூஸா நபியைப் போலவே நீங்களும் இறைவனின் பேச்சைக் கேட்கலாம்.



இதுபோன்ற அறிவுகளைத் தேடுவதற்காக ஒருவன் பிரயாணப்பட்டால், அவனுடைய பிரயாணம் உடலுடன் சம்பந்தப்பட்டதாக இருக்காது. இந்தப் பிரயாணத்தில் அவனுடைய மனத்துக்குப் பெரிதும் சம்பந்தம் இருக்கும். வீட்டிலேயே உட்கார்ந்துகொண்டு உலகம் முழுவதையும் அவன் சுற்றிப்பார்க்கலாம்; உலகிலுள்ள அணுக்கள் ஒவ்வொன்றும் எப்படிப் பேசுகின்றன என்பதை அவன் தெரிந்து கொள்ளலாம். இறைவனை எப்படித் துதிக்கின்றன என்று உணர்ந்து கொள்ளலாம்.

அவன் இந்த மண்ணுலகில் மட்டும்தான் பிரயாணம் செய்வான் என்றும் சொல்ல முடியாது. அண்ட சராசரம் முழுவதையும் அவன் அணுஅணுவாகச் சுற்றிப் பார்க்கலாம். சூரியன், சந்திரன், விண்மீன்கள் அத்தனையும் இறைவனின் ஆணைக்குக் கட்டுப்பட்டு வினாடி தவறாமல் செயலாற்றிக் கொண்டிருப்பதை அவன் சுத்தமாகத் தெரிந்து கொள்ளலாம்...''

- நான் எடுத்திருந்த பிரச்சினையை விட்டு வெகு தூரம் விலகி வந்து விட்டதாக நினைக்கிறேன். எனவே நாம் இப்போது நம்முடைய தலைப்புக்குச் செல்வோம்.

அறிவைத் தேடிப் பிரயாணம் செய்கிறவர்கள் ஒரு சாரார் என்று நான் குறிப்பிட்டேனல்லவா? மற்றொரு சாரார் இறை வணக்கத்தை அடிப்படையாக வைத்து பிரயாணப்படுகிறார்கள். மக்கா யாத்திரையை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். திருத்தூதர்கள், 'அவ்லியா' எனப்படும் இறையன்பர்கள், நபித்தோழர்கள், அறிஞர்கள் முதலியோரின் கல்லறைகளைக் காணச் செல்வதும் இந்த இனத்தைச் சேர்ந்ததுதான். மக்கா யாத்திரை பற்றி

முழு விவரம் உரிய நேரத்தில் இடம்பெறும். அவற்றை இங்கு எழுத வேண்டியதில்லை என்று நான் நினைக்கிறேன்.

இந்த நோக்கங்களுக்காக நீங்கள் பிரயாணப்பட்டால், உங்கள்மீது யாராலும் குறை சொல்லமுடியாது. ''மக்காவின் பள்ளிவாசல், மதீனாவின் பள்ளிவாசல், பைதுல் முகத்தசின் பள்ளிவாசல் ஆகிய மூன்றையும் தவிர்த்து வேறு எங்கும் பிரயாணப்படக்கூடாது'' எனும் நபிக் கருத்துக்கு நம் கருத்து மாறுபட்டதல்ல. ஏனெனில் பெருமானார் (ஸல்) அவர்கள், பள்ளியைச் சேர்ந்த பகுதியில் தான் அடக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

மொத்தத்தில் உயிரோடிருக்கும்போது யாரை எல்லாம் சந்தித்து நீங்கள் அறிவுரை பெற்றீர்களோ, அவர்களின் கல்லறைகளை எல்லாம் நீங்கள் நிச்சயமாகச் சந்திக்கலாம். இது சிறப்பானதொரு காரியம். அறிஞர்களையும் நல்லவர்களையும் பார்ப்பதுகூட ஒருவிதத்தில் இறைவணக்கத்துக்கு நிகரான ஒரு செயல்தான். இறைவனின் நல்லடியார்களைச் சந்திப்பதே இறை வணக்கத்துக்கு நிகரான செயல்தான். அவர்களின் வாழ்வை எண்ணிப் பார்த்துப் படிப்பினை பெறுவது எவ்வளவு சிறந்த செயல் என்பதற்கு விளக்கம் தேவையில்லை. ''நட்புக்கு விளக்கம்'' எனும் நூலில் இதுபற்றிய முழு விளக்கம் இடம் பெற்றிருக்கிறது.

''நான்கு மைல் தூரம் நடந்தேனும் இறைவனின் நல்லடியாரைச் சந்தியுங்கள்'' என்ற இறை கருத்து இங்கு நம் கவனத்திற்குரியது. மூஸா நபிக்கு அருளப்பட்ட தவ்ராத் வேதத்தில் இந்தக் கருத்து இடம் பெற்றிருக்கிறது.



மற்றொரு சாரார் தம் பிரயாணத்தை வேறொரு கோணத்திலிருந்து தீர்மானிக்கிறார்கள். உள்ளூரில் கெட்ட சூழ்நிலை பரவிவருகிறது என்ற காரணத்தினால் இவர்கள் வெளியூருக்குப் பிரயாணப்படுகிறார்கள். இவர்கள், மார்க்கக் காரியங்களுக்கு குறுக்கீடு ஏற்படுகிறது என்ற காரணத்தினால் வெளியூரைத் தேர்ந்தெடுக்கிறார்கள். இது உண்மையிலேயே சிறப்பான காரியம் தான். திருத்தூதர்களும் இறையன்பர்களும் இந்த விதத்தில் பிரயாணப்பட்டிருக்கிறார்கள்.

அரசாங்கத்தில் பதவி வகிக்க வேண்டிய பொறுப்பு, மக்களுடன் அதிகமாகத் தொடர்புகொள்ளவேண்டிய பொறுப்பு முதலியவை குறுக்கிடும்போதும் நமது முன்னோர் பிரயாணத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். அரசாங்கப் பொறுப்பு, மனத்திலுள்ள அமைதிக்கு முற்றுப்புள்ளி வைக்கக்கூடிய ஒன்று என்பதுதான் இதற்குக் காரணம் என்று நான் நினைக்கிறேன். மார்க்கத்தின் காரியங்களுக்கு மன அமைதி அவசியம். இது இல்லையேல் மார்க்கக் காரியங்களில் உயிர் இருக்காது.

மக்களோடு அதிகமாகத் தொடர்புகொள்வதும் இத்தகையதுதான். இப்படித் தொடர்புகொள்கிறவர்களால் இறை வழியில் இன்பத்தைக் காண முடியாது. எனவேதான் அவர்கள் சூழ்நிலையை மாற்றும் எண்ணத்துடன் வெளியூருக்குப் புறப்படுகிறார்கள். வெளியூரில் மனிதனின் உள்ளம் இறைவன் பக்கம் திரும்புவதற்குப் போதிய வாய்ப்பு உண்டு.

இதிலிருந்து, மார்க்கத்திற்குப் பொருந்தாத சூழ்நிலை ஏற்படும்போதெல்லாம் வெளியூருக்குப் புறப்பட்டு விடவேண்டும் என்பது பொருளல்ல. மார்க்கத்தில்

ஆழ்ந்த பற்றுதலுள்ளவர்கள் எந்தச் சூழலையும் அடக்கி யாண்டு இறைவழியில் ஈடுபடுகிறார்கள். இவர்களை பொறுத்த மட்டில் உள்ளூரும் வெளியூரும் ஒன்றுதான். வெளியூரில் கிடைக்கும் மனக் கட்டுப்பாடு அவர்களுக்கு உள்ளூரிலும் கிடைக்கும். எனவே, அவர்கள் எப்போதும் இறையின்பத்தில் லயித்திருக்கிறார்கள். அவர்களின் குறிக்கோளைத் தடுத்து நிறுத்தும் ஆற்றல் உலகில் தோன்றும் எந்தச் சூழலுக்கும் கிடையாது.

ஆனால், இந்த மனப்பக்குவம் எல்லோருக்கும் கிடைத்துவிடவில்லை. திருத்தூதர்கள், இறையன்பர் களைத் தவிர்த்து மற்றவர்களுக்கு அது அசாத்தியம். இந்தப் படித்தரத்தை முயற்சியால் அடைவது மிகச் சிரமம்.

நோய் பரவி வருகிறது என்ற காரணத்தை வைத்து வேறு சிலர் வெளியூருக்குப் புறப்படுகிறார்கள். இதில் தவறு கிடையாது. சில வேளைகளில் இது அவசியமும் ஆகும்.

ஆனால், ஓர் ஊரில் கொள்ளைநோய் பரவினால், அந்த ஊரைவிட்டு ஓடிவிடுவது அவசியமல்ல. இதைப் பெருமானார் (ஸல்) அவர்கள் கண்டித்திருக்கிறார்கள். இந்த வழியில் நமக்குப் பல்வேறு நபிக்கருத்துக்கள் கிடைத்திருக்கின்றன. இதைப்பற்றிய விரிவுரை 'இறை நம்பிக்கை' எனும் நூலில் இடம் பெற்றிருக்கிறது.

மேலே நான் குறிப்பிட்டதுபோல், மக்கா யாத்திரை யும், அறிவுக்காக மேற்கொள்ளப்படும் பிரயாணமும் அவசியமானவை. அறிஞர்களைச் சந்திப்பதற்காக அல்லது பெரியோரின் கல்லறைகளைப் பார்ப்பதற்காகப்



பிரயாணப்படுவது மார்க்கத்தின் அனுமதியைப் பெற்ற ஒன்று.

நான்கு பேர் பாராட்டவேண்டும் என்பதற்காகவோ நான்கு பேருடைய கண்ணியத்தைப் பெறுவதற்காகவோ மக்காவிற்குப் புறப்படுவது வரவேற்கத் தகாத ஒரு செயல். இதற்கு மார்க்கத்தில் பெருமை கிடையாது, இதுபோன்ற செயலை மறுமைக்குரியது என்று குறிப்பிட முடியாது. ஏனெனில், ''செயல்கள் அத்தனையும் எண்ணங்களைப் பொறுத்தவை'' என்று பெருமானார் (ஸல்) அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

''உள்ளூரிலேயே இருப்பது, வெளியூர் செல்வது - இந்த இரண்டில் எது சிறந்தது?'' என்பது இங்கு முளை விடும் ஓர் வினா. இதை நினைக்கும்போது வேறொரு வினா நமக்கு முன்னால் வருகிறது. ''கலந்துறவாடுவது, தனித்திருப்பது - இந்த இரண்டில் சிறந்தது எது?'' இந்த இரண்டு வினாக்களுக்கும் விடை ஒன்றுதான். 'தனிமை' என்ற நூல் இந்த வழியில் உங்களுக்குத் துணை செய்யலாம். மொத்தத்தில், மார்க்கத்திற்கு எது துணை செய்கிறதோ அதுவே சிறப்புள்ளது; மற்றதை மறந்துவிட வேண்டியது.

இறைவனைப்பற்றிய உண்மையைத் தெரிந்து கொள்வது, இறைவனைப்பற்றிய எண்ணத்தில் இனிமை யைக் காண்பது - இவைதான் மார்க்கத்தின் கனிகள், உங்களுக்கு இறை தியானத்தில் இனிமை ஏற்பட வேண்டுமானால், நீங்கள் தொடர்ந்தாற்போல், இறை தியானத்தில் ஈடுபடவேண்டும். இறைவனைப் பற்றிய உண்மை உங்களுக்குத் தெரியவேண்டுமானால், நீங்கள்

தொடர்ந்தாற்போல் இறை சிந்தனையில் ஈடுபட வேண்டும்.

எனவே, இறை தியானத்தில் ஈடுபடுவது எப்படி? இறை சிந்தனையில் ஈடுபடுவது எப்படி? என்று நீங்கள் தெரிந்கொள்ளவில்லை என்றால், உங்களுக்கு இந்த இரண்டு பேறும் கிடைக்கப்போவதில்லை.

இத்தகைய உயர்ந்த காரியங்களில் தொடர்ந்தாற்போல் ஈடுபடுவதற்கு வெளியூரைவிட உள்ளூரே சிறந்தது என்பதையும் இங்கு நான் ஏற்றுக்கொள்கிறேன். மன வலிமை பெற்றவர்களைத் தவிர்த்து மற்றவர்களுக்குப் பிரயாணத்தினால் பெரிதும் மனக்கலக்கம் ஏற்படுகிறது.

என்றாலும், இந்த மனக்கலக்கம் இறைவன் பக்கம் நிச்சயமாகத் திரும்பும். பிரயாணம் செய்கிறவர்கள் உள்ளூரில் இருப்பவர்களைவிட அதிகமாக இறைவனை எண்ணிப் பார்க்கிறார்கள். இதனால் உள்ளூர் வாசிகளுக்கு ஏற்படாத மனப்பற்றுதல் வழிப்போக்கர்களுக்கு ஏற்படுகிறது. இது நல்ல சூழ்நிலைதான். என்றாலும், சில வேளைகளில் குறிக்கிடும் துன்பங்களைப் பார்த்து, இறைவன் மீது வெறுப்புக்கொள்கிறவர்களும் இருக்கிறார்கள். இத்தகையவர்களால் பிரயாணத்திலிருந்து பெறும் நன்மையை அடைய முடியாது.

எனவே, இறைவழியில் நடக்கிறவர்கள் அறிவைத் தேடுவதற்காக, அல்லது மெய்ஞ்ஞானி ஒருவரைச் சந்திப்பதற்காக பிரயாணப்படலாம். இந்தப் பிரயாணத்தில் மிகப் பெரும் நன்மை உண்டு. இப்படியொரு மெய்ஞ்ஞானியைத் தேடிப்பிடித்து அவரைப் பின்பற்றினால் உங்களுக்கு இறை சிந்தனையில் பற்றுதல் ஏற்படலாம்.



ஆனால் தற்போதைய நிலையில் மெய்ஞ்ஞானிகள் என்று பாராட்டப்படுகிறவர்களில் பலர் மிக மோசமான நிலையில் இருக்கிறார்கள். உயர்ந்த பண்புக்கும் மேலான சிந்தனைக்கும் நிலைக்களனாக இருக்கவேண்டிய அவர்கள் தம் பொறுப்பை மறந்திருக்கிறார்கள். செயலாற்ற வேண்டிய அவசியமில்லை என்று நினைக்கும் அவர்கள் செயலற்ற சிந்தனைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.

இத்தகைய 'மெய்ஞ்ஞானி'களால் உங்களுக்கு எந்த நன்மையும் கிடையாது. மார்க்கத்தை மதிக்காத எந்த ஞானியையும் இஸ்லாம் மதிக்காது. எனவே நீங்களும் அவர்களை மதிக்கவேண்டாம்.

உண்மையில் இவர்கள் மெய்ஞ்ஞானிகளே அல்லர். இறைவனுக்காக மட்டும் வாழக்கூடிய பெருந்தகைகளையே நான் மெய்ஞ்ஞானிகள் என்று குறிப்பிடுகிறேன். இறைவனைத் தவிர்த்து வேறு எதன் பக்கமும் அவர்களின் சிந்தனை திரும்பாது. உலகிலுள்ள எந்த இன்பத்தையும் அவர்கள் இறைவனுக்கு மேலே உயர்த்துவதில்லை. இதனால் ஏற்படும் மனப்பக்குவம் அவர்களைச் செயலாற்றத் தூண்டுகிறது. எனவே அவர்கள் எண்ணத்தாலும் செயலாலும் நற்காரியங்கள் செய்கிறார்கள். அவர்கள் செயலாற்றவில்லை என்றால் அவர்களுக்கு நாம் கொடுக்கும் மரியாதை குறைந்து போய்விடும்.

இவர்கள் பிரயாணப்பட்டால் சூழ்நிலை முற்றிலும் மாறுபட்டதாக இருக்கும். வேண்டுமென்றே இவர்கள் தம்மைத் துன்பப்படுத்திக் கொள்கிறார்கள். இதனைச்

சட்ட நிபுணர்கள் மறுக்கிறார்கள். ''இது கூடாத செயல்'' என்று தீர்ப்பு வழங்குகிறார்கள்.

ஆனால், இங்கு சட்ட நிபுணர்களின் கண்ணோட்டத்தை நாம் சிறிது ஆராயத்தான் வேண்டும். என்னைக் கேட்டால், இதில் தவறு கிடையாது என்றே கூறுவேன். பல்வேறு ஊர்களைச் சுற்றிப் பார்ப்பதன் மூலம் மெய்ஞ் ஞானிகள் தம் ஞானத்தை வளர்க்கிறார்கள். அத்துடன் செயலாற்றும்போது சோர்வடையும் உடலுக்குப் புத்துணர்வு கொடுப்பதும் அவர்களின் நோக்கங்களில் ஒன்று. இதிலெல்லாம் தவறு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

மார்க்கத்திற்கோ உலக வாழ்விற்கோ பயன்படாத விதத்தில் ஊர் ஊராகச் சுற்றிக் கொண்டிருப்பவர்கள் இப்போது நம் சிந்தனைக்கு வருகிறார்கள். கண்ட இடங்களில் அலைந்து திரியும் ஆடு மாடுகளைப் போன்றவர்கள் இவர்கள். இவர்கள் மற்றவர்களுக்குத் தொல்லை கொடுக்கவில்லை என்றால் இவர்களின் பிரயாணமும் ஆகுமானதுதான்.

என்றாலும், இப்படிக் குறிக்கோள் இல்லாமல் அலைந்து திரியும் வழிப்போக்கர்கள் தம்மை ஞானிகள் என்று சொல்லிக்கொள்ளக்கூடாது; ஞானிகளுக்கென்று வரும் அன்பளிப்புகளில் கைவைக்கக்கூடாது. மார்க்கத்தில் பற்றுதலும் செயல் முறையில் நேர்மையும் சிந்தனையில் தெளிவும் உள்ளவர்களையே நாம் மெய்ஞ்ஞானிகள் என்று குறிப்பிடுகிறோம்.

எனவே, இந்த இலக்கணத்திற்கு மாறுபட்ட யாருக்கும் அந்தப் புனிதர் பெயர் பொருந்தாது. மார்க்கத்தின் வரம்புகளை மதிக்காத ஒருவனுக்கு மெய்ஞ்ஞானி என்று பெயரிட முடிந்தால், இறைவனையே மறுக்கக்கூடிய நாத்திகனுக்கும் அப்படிப் பெயரிடலாம். பின்னவன் இறைவனை மறுக்கிறான்; முன்னவன் இறைவனின் மார்க்கத்தை மறுக்கிறான்.



எனவே, உண்மையான ஞானிகளைத் தவிர்த்து மற்றவர்களுக்கு நீங்கள் கண்ணியம் கொடுக்கக் கூடாது. உங்களுக்கு இறைவழியில் துணை செய்யும் தகுதி மெய்ஞ்ஞானிகளுக்கே உண்டு. மற்றவர்களின் போலித் தோற்றத்தைக் கண்டு நீங்கள் ஏமாந்துவிடக் கூடாது.

# 3. புறப்படும்போது

நீங்கள் உயர்ந்த நோக்கத்தை மனத்தில்கொண்டு பிரயாணப்படுகிறீர்கள் என்றே வைத்துக்கொள்வோம். பிரயாணப்படுவதற்கு முன்பிருந்து பிரயாணத்திலிருந்து திரும்பி வரும்வரை, நீங்கள் பல நிபந்தனைகளைக் கவனிக்கவேண்டியிருக்கிறது. இப்படிப் பார்க்கும்போது பதினோரு நிபந்தனைகள் தோன்றுகின்றன. மார்க்கத்தின் கண்ணோட்டத்தில் உங்கள் பிரயாணம் சிறந்து விளங்க வேண்டுமானால், அந்த நிபந்தனைகளை நீங்கள் கவனித்துதான் ஆகவேண்டும். அப்படி நீங்கள் நடந்து கொண்டால், மெய்ஞ்ஞானிகளைப்போல் பிரயாணம் செய்த பெருமை உங்களுக்குக் கிடைக்கும்.

நீங்கள் புறப்படுவதற்கு முன்னால், உங்களுக்கு இருக்கும் கடன்களை எல்லாம் அடைத்துவிடவேண்டும். யார் யாருக்கு நீங்கள் உதவி செய்யவேண்டுமோ அவரவர்களுக்கு முறைப்படி உதவி செய்துவிடுங்கள். உங்களிடம் ஏற்கனவே ஒப்படைக்கப்பட்டிருக்கும் அமானிதப் பொருள்களை உரியவருக்குத் திருப்பிக் கொடுத்து விடுங்கள்.

உங்கள் பிரயாணத்திற்கென்று நீங்கள் எடுத்துச் செல்லும் பணம் நல்ல வழியில் கிடைத்ததாக இருக்க



வேண்டும். உங்களுக்கும் உங்கள் நண்பர்களுக்கும் போதுமான அளவு பணத்தை எடுத்துக்கொள்ளுங்கள்.

''நல்ல சம்பாத்தியத்தில் கிடைத்ததை வைத்து ஒருவன் பிரயாணப்பட்டால் அவன் கண்ணியத்திற்குரிய வன்'' என்று உமர் (ரலி) அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

பிரயாணத்தின்போது மற்றவர்கள்மீது வெறுப்பைக் காட்டக்கூடாது. எனவே இனிமையாக உரையாடுங்கள். பசியோடு வந்திருப்பவர்களுக்கு உணவு கொடுங்கள். சுருங்கச் சொன்னால், பிரயாணத்தின்போது நீங்கள் எல்லாவிதத்திலும் உயர்ந்த பண்புகளுக்கு நிலைக்களனாக இருக்கவேண்டும். இதனால் அடிமனத்திலிருக்கும் கறைகள்கூடச் சுவடு தெரியாமல் மறைந்து போகலாம்.

பிரயாணத்தின்போது இப்படிச் சிறப்பாக நடந்து கொள்கிறவர்கள் அனேகமாக உள்ளூரிலும் அப்படித்தான் நடந்துகொள்வார்கள். ஆனால், ஒரு சிலர் பிரயாணத்தின் போது காட்டும் பண்பை உள்ளூரில் காட்ட மறந்துவிடு கிறார்கள். எனவே, உள்ளூரிலும் வெளியூரிலும் நீங்கள் பண்புடன் நடந்துகொண்டால் உண்மையிலேயே நீங்கள் சிறப்புள்ளவர்கள்.

இதனை முதுமொழியொன்று தெளிவு படுத்துகிறது, ''உள்ளூரிலுள்ள நண்பர்களும் பிரயாணத் தோழர்களும் ஒரு மனிதனைப் பாராட்டினால், அவன் மீது குறை சொல்லாதீர்கள்.''

பிரயாணம் என்பது சிரமத்திற்கு நிலைக்களனான ஒன்று. அப்போது பண்புடன் நடந்துகொள்வது மிகச் சிரமம். ஆனால் இந்தக் கட்டத்தில் ஒருவன் பண்புடன்

நடந்துகொண்டால், அவனுடைய பண்பு எப்போதும் நிலைத்து நிற்கும்.

இரண்டாவதாக, பிரயாணத்தின்போது நண்பர் ஒருவரைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளவேண்டும். நீங்கள் தனிமையில் புறப்படுவது அவ்வளவு நல்லதல்ல. இப்படி நீங்கள் தேர்ந்தெடுக்கும் நண்பர் உங்களுக்கு மதக் காரியங்களில் துணை செய்கிறவராகவும், துன்பம் வரும்போது உதவி செய்கிறவராகவும் இருக்க வேண்டும். மார்க்கத்தை நீங்கள் மறந்திருக்கும்போதெல்லாம் அவர் உங்களுக்கு நினைவுறுத்தவேண்டும். உங்கள் நண்பரின் குணம் உங்களை ஆட்கொள்ளலாம். உங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால் உங்கள் நண்பரைப் பார்த்தால் போதுமானது. இப்படி நண்பருடன் சேர்ந்து பிரயாணப்படுவதால் உறுப்பெறும் நன்மைகள் பல்லாயிரம். எனவேதான் தனிமையில் பிரயாணம் செய்வதைப் பெருமானார் (ஸல்) அவர்கள் தடை செய்கிறார்கள்.

''மூன்று பேர் சேர்ந்து பிரயாணப்பட்டால் அவர்களில் ஒருவர் மற்ற இருவருக்கும் தலைவராக இருக்கட்டும். அவரது வார்த்தைக்கு அவர்கள் மரியாதை கொடுக்கட்டும்'' என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இரண்டு மூன்று பேர் சேர்ந்து பிரயாணப்படும்போது கருத்து வேற்றுமை ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காகவே பெருமானார் (ஸல்) அவர்கள் இப்படியொரு முன்னேற்பாடு செய்து வைத்திருக்கிறார்கள். தனிப்பட்ட ஒருவரின் கருத்தைப் பின்பற்றும்போது இதுபோன்ற தகராறுகள் ஏற்பட முடியாது.



இந்த உண்மையை நீங்கள் தெளிவாகத் தெரிந்து கொள்ள நினைத்தால், உலகத்தையே பாருங்கள். உலகம் சீராக நடைபெறுவதற்கு ஒரே காரணம் இதுதான். உலகத்தை அடக்கியாள்கிறவன் ஒரே இறைவன். ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டால், உலக வாழ்வே சீர்குலைந்து போய்விடும்.

இப்படி நாட்டு நன்மையில் அக்கறை காட்டும் தலைவர் ஒருவர் நாட்டுக்குத் தேவைதான். அதேபோன்று வீட்டுக்கும் ஒரு தலைவர் தேவைதான். எனவே தான் பிரயாணத்தின்போது ஒருவரைத் தலைவராக்கிக் கொள்ள வேண்டும் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள். இல்லையேல் பிரயாணத் தோழர்களிடையே தோன்றும் கருத்து வேற்றுமை விரோதத்திற்கு வழி வகுத்துவிடும். அப்புறம் நன்மைக்குப் பதிலாகத் தீமை உருவாகும்.

இப்படிச் சிலர் சேர்ந்து பிரயாணப்படும்போது அவர்களில் ஒருவர் தலைவராக்கப்படுகிறார் என்று வைத்துக்கொள்வோம். அவர் தன்னலத்தில் குறியாக இருக்கக்கூடாது. மற்றவர்களுக்கு நன்மை ஏற்படக்கூடிய வழியிலேயே அவர் பிரவேசிக்க வேண்டும். அவர்களுக்குத் தம்மையே அவர் ஓர் அரண்போல் நினைத்துக் கொள்ள வேண்டும்.

அறிஞர்கள் முரூஸியும் ரிபாதியும் பிரயாணப் பட்டார்கள்.

''நம்மில் யார் தலைவராக இருப்பது? நீங்கள் இருக்கிறீர்களா?'' நான் இருக்கட்டுமா? என்று கேட்டார் ரிபாதி.

''நீங்கள்தான் இருக்கவேண்டும்'' என்றார் முரூஸி.

அதன்படி தலைவரான ரிபாதி அந்தப் பிரயாணம் நெடுகிலும் தன் சாமான்களையும் முரூஸியின் சாமான் களையும் சுமந்து சென்றாராம்.

ஒருநாள் திடீரென்று மழை பெய்தது. ஒதுங்குவதற்கு இடமில்லை. அந்த மழையில் தலைவர் ரிபாதி தம் நண்பரைச் சுமந்து நின்றாராம்!

''வேண்டாம்!'' என்றார் முரூஸி.

ரிபாதி எதிர்த்துப் பேசினார். ''நான்தான் தலைவர் என்பதை நீங்கள் ஏற்றுக்கொண்டு விட்டீர்கள் அல்லவா? நான் சொல்வதுபோல்தான் நீங்கள் நடந்து கொள்ள வேண்டும்.''

பிரயாணக் குழுவுக்குத் தலைவராக இருப்பவர் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பதைக் காட்டு வதற்கு இந்த வரலாற்றுத் துணுக்கு ஒன்றே போதுமானது என்று நான் நினைக்கிறேன்.

'பிரயாணத் தோழர்கள் எத்தனை பேர் இருக்க வேண்டும்?' என்பது இப்போது நம் சிந்தனைக்குரிய பிரச்சினை. இந்தப் பிரச்சினைக்குப் பெருமானார் (ஸல்) அவர்களே விளக்கம் கொடுத்துவிட்டார்கள்: ''நான்கு பேர் சேர்ந்து பிரயாணப்படுவதே நல்லது!''

பெருமானார் (ஸல்) அவர்கள் இப்படிக் கூறியிருப் பதற்குத் தகுந்த காரணம் உண்டு. பிரயாணச் சாமான் களைப் பாதுகாத்துக்கொள்வது பிரயாணத்தின் வேலை களில் ஒன்று. இதற்கு நிச்சயமாக ஓர் ஆள் தேவை. தவிர அலைந்து முடிக்கக்கூடிய காரியங்கள் பல பிரயாணத்தில் தோன்றக்கூடும். இதற்கு ஓர் ஆள் தேவை. இப்படி இரண்டு பேரும் இரண்டு வேலைகளில் ஈடுபடும்போது



அவர்கள் தனித்து விடப்படுகிறார்கள். நான்கு பேர் சேர்ந்து பிரயாணப்படும்போது இந்தத் தொல்லை ஏற்பட முடியாது. இரண்டு பேர் சாமான்களைக் கவனித்துக் கொள்ளலாம். இவர்கள் ஒருவருக்கொருவர் துணையாக இருக்கலாம். மற்ற இரண்டு பேர் இதர காரியங்களில் ஈடுபடலாம். இதனால்தான் பெருமானார் (ஸல்) அவர்கள் இப்படிக் கூறியிருக்கவேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

மூன்றாவதாக, நீங்கள் புறப்படும்போது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருடனும் நல்லவிதமாக உரையாடவேண்டும். புறப்படும்போது பெருமானார் (ஸல்) அவர்கள் செய்ததுபோல் பிரார்த்தனை செய்ய வேண்டும். உங்களுக்குப் பிரார்த்தனை செய்யுமாறு அவர்கள் அனைவரையும் வேண்டிக்கொள்ளவேண்டும்.

''ஒரு மனிதன் பிரயாணப்பட்டால் தன் நண்பர்கள் அனைவரிடமும் தனக்குப் பிரார்த்தனை செய்யும்படி வேண்டிக்கொள்ளவேண்டும்'' என்று பெருமானார் (ஸல்) அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

பிரயாணப்படும் நண்பர்களில் யாரேனும் ஒருவர் தனக்குப் பிரார்த்தனை செய்யுமாறு வேண்டிக் கொண்டால் பெருமானார் (ஸல்) அவர்கள் இப்படிப் பிரார்த்தனை செய்வார்களாம்: 'உங்களுக்கு இறைவன் ஆழ்ந்த இறையச்சத்தை ஏற்படுத்துவானாக! உங்கள் குற்றங்களை மன்னிப்பானாக! நீங்கள் செல்லும் வழியெல்லாம் நன்மைக்குத் துணை செய்வானாக!''

நான்காவதாக, பிரயாணத்திற்கு முன்னர் நீங்கள் இறைவனைச் சிறிதுநேரம் வணங்கவேண்டும். உங்கள்

முயற்சியில் நன்மையை ஏற்படுத்துமாறு வேண்டிக்கொள்ள வேண்டும். இதைப் பற்றிய விளக்கம் 'தொழுகை' எனும் நூலில் இடம் பெற்றிருக்கிறது. அடுத்து, பிரயாணப்படும் போது சிறிது நேரம் இறைவனை வணங்கவேண்டும்.

ஐந்தாவதாக, நீங்கள் வீட்டு வாசலுக்கு வந்ததும் இப்படிக் கூற வேண்டும்: ''இறைவனின் திருநாமத்தை முன்வைத்து என் பிரயாணத்தை ஆரம்பிக்கிறேன். அவனன்றி அணுவும் அசையாது. இறைவனே! தீய வழியில் பிரவேசிக்கவிடாமல் என்னைத் தடுப்பாயாக! என்னால் யாருக்கும் பாதகம் ஏற்பட்டு விடாதபடி பாதுகாப்பாயாக...!''

பிரயாணத்தைத் துவக்கியதும் இப்படிக் கூறுங்கள். ''உன்னை நம்பியே நான் பிரயாணப்படுகிறேன்; உன் மீதே நம்பிக்கை வைக்கிறேன்...'' - நீங்கள் தங்கிச் செல்லும் இடங்கள் எல்லாவற்றிலும் இப்படிப் பிரார்த்தனை செய்யலாம்.

ஆறாவதாக, ஓர் இடத்தில் தங்கிவிட்டுப் புறப்படும் போது காலையிலே புறப்படுங்கள். இதற்கு ஆதாரமாக நபிக்கருத்துக்கள் இருக்கின்றன. வியாழன்று புறப்படுவது சாலச் சிறந்தது. தபூக் யுத்தத்திற்கென்று பெருமானார் (ஸல்) அவர்கள் வியாழனன்று புறப்பட்டார்கள்.

''வியாழனைத் தவிர்த்து மற்ற நாட்களில் பெருமானார் (ஸல்) அவர்கள் பிரயாணப்படுவது மிகக் குறைவு'' என்று கூறுகிறார் அப்துல்லாஹ் பின் கஅப்.

வெள்ளிக்கிழமையன்று தொழுகைக்கு முன்னால் பிரயாணப்படுவது நல்லதல்ல. இதனால் முக்கியமான தொரு தொழுகையை அலட்சியம் செய்யவேண்டி ஏற்படும். இதற்கு மார்க்கத்தில் அனுமதியில்லை.



ஏழாவதாக, உச்சி வெய்யில் வரும்வரை பிரயாணத்தை முறித்து எங்கும் தங்காதீர்கள். இது பெருமானாரின் நடைமுறைகளில் ஒன்று. அவர்கள் அனேகமாக இரவு வேளைகளில்தான் பிரயாணம் செய்தார்கள். ''பகலில் இல்லாத அற்புதங்கள் இரவில் இருக்கின்றன'' என்று அவர்கள் கூறினார்கள்.

எட்டாவதாக, நான்கு பேருடன் சேர்ந்து கூட்டமாகப் பிரயாணப்படும்போது அவர்களைவிட்டுத் தனியாகப் பிரிந்துவிடாதீர்கள்.

ஒன்பதாவதாக, பிரயாணத்தின்போது தேவைக்கு மேல் அதிகமாகச் சாமான்களை எடுத்துக் கொள்ளாதீர்கள். பிரயாணத்தின் நடுவே இது உங்களுக்குத் தொந்தரவு கொடுக்கக்கூடும்.

பத்தாவதாக, பிரயாணத்தின்போது கண்ணாடி, சீப்பு, கத்திரிக்கோல் முதலான அத்தியாவசியப் பொருள்களை மறந்துவிடாமல் எடுத்துக் கொள்ளுங்கள். இதற்கு அன்னை ஆயிஷா (ரலி)யின் கருத்து ஆதாரம் கொடுக்கிறது.

''சுர்மாக்கூடு, கண்ணாடி ஆகிய இரண்டையும் பிரயாணத்தின்போது பெருமானார் மறப்பதில்லை'' என்று நபித் தோழர்கள் தெரிவிக்கிறார்கள்.

பதினொன்றாவதாக, நீங்கள் திரும்பி வரும்போது இறைவனின் பெருமை உங்கள் நெஞ்சத்தில் நிலைத்து நிற்கவேண்டும். உற்றார், உறவினர்கள், நண்பர்கள்

முதலியோருக்கு ஏதேனும் அன்பளிப்புகள் வாங்கிக் கொண்டு வருவது நல்லது. உங்கள் சக்திக்கும் தகுதிக்கும் தக்கவாறு அன்பளிப்புக் கொடுத்தால் போதுமானது; இதற்காகச் சிரமப்பட வேண்டியதில்லை. பிரயாணத்தி லிருந்து வருகிறவரைப் பார்த்து, மற்றவர்கள் மகிழ் கிறார்கள். இந்த மகிழ்ச்சியை உங்கள் அன்பளிப்பு பல மடங்காகப பெருக்கக்கூடும்.

மேலே நான் குறிப்பிட்டதுபோல், உங்கள் பிரயாணம் மதத்தை அடிப்படையாகக் கொண்டே உருவாக வேண்டும். உங்கள் மார்க்கத்திற்குத் துணை செய்யாத எந்தப் பிரயாணத்தையும் நீங்கள் மேற்கொள்ளக்கூடாது. மொத்தத்தில், உங்கள் பிரயாணம் மார்க்கத்திற்காகவே மேற்கொள்ளப் படவேண்டும். இந்தக் குறிக்கோளில் மாறுதல் தோன்றினால் பிரயாணத்தை ஒத்திபோட்டு விடுங்கள். பிரயாணத்தின் நடுவே எந்த ஊரிலேனும் நீங்கள் தங்க நினைத்தால், அங்குள்ள பெரிய மனிதர் ஒருவரைப் பார்க்க வேண்டும் என்று தீர்மானம் செய்து கொள்ளுங்கள். இத்தகைய பெரிய மனிதர்களிடமிருந்து படிப்பினை பெறுவதுமட்டுமே உங்கள் குறியாக இருக்கவேண்டும். நீங்கள் பெரிய மனிதர்களைச் சந்தித்துப் பேசிய சம்பவத்தைக் கூறிப் பெருமையடிக்க நினைக்காதீர்கள்.

பிரயாணத்தின் நடுவே நீங்கள் எந்த ஊரில் தங்கினாலும், ஒரு வாரத்திற்குமேல் அங்கு முகாம் போடாதீர்கள். ஒரு வாரத்திற்குள் உங்களால் புறப்பட முடியாவிட்டால், பத்து நாட்களுக்குமேல் அங்கு தங்காதீர்கள்.



ஆனால், நீங்கள் சந்தித்த பெரிய மனிதர் உங்களை மேலும் சிறிது நாள் தங்கும்படி வற்புறுத்தினால் அவரது வார்த்தைக்கு மதிப்புக் கொடுங்கள்.

இப்படித் தங்கும்போது ஏழைகளுடன் நல்லவித மாகப் பழகுங்கள். அவர்கள்மீது வெறுப்பை வாரிக் கொட்டாதீர்கள்.

உங்கள் பிரயாணத்தில் ஒரு நண்பரைக் கண்டால், அவர் வீட்டில் மூன்று நாட்களுக்குமேல் தங்காதீர்கள். விருந்தினர்களுக்கு மார்க்கம் ஏற்படுத்தியிருக்கும் எல்லை இது. ஆனால், உங்கள் பிரிவு உங்கள் நண்பரைத் துன்பப்படுத்தும் என்று தெரிந்தால் மேற்கொண்டு சிறிது நாட்கள் அவரிடம் தங்கலாம்

பெரிய மனிதர் ஒருவரைச் சந்திக்கச் செல்லும் நீங்கள் ஒரே ஒருநாள் தான் அவரிடம் தங்கலாம். அங்கேயே நீங்கள் முகாம் போட்டுவிட்டால், அது உங்கள் பிரயாண லட்சியத்திற்குக் குறுக்கீடு செய்யும். பெரிய மனிதர் ஒருவரைச் சந்திக்கும் நோக்கத்தோடு அவரது வீட்டை நீங்கள் தேடிச் செல்லலாம். அவர் வீட்டிற்குள் இருந்தால், அவசரப்படுத்தும் விதத்தில் கதவைத் தட்டாதீர்கள். அவர் வெளியில் வரும்வரை காத்திருங்கள். அவர் வெளியில் வந்ததும் மரியாதையுடன் முன்னால் சென்று 'சலாம்' சொல்லுங்கள். அவருடைய அனுமதியில்லாமல், அவ ருக்கு முன்னால் எதைப் பற்றியும் பேசாதீர்கள். ஏதேனும் ஒன்றைப் பற்றி நீங்கள் பேசத்தான் வேண்டும் என்றால், அதற்கு முன்கூட்டியே அனுமதி பெற்றுக்கொள்ளுங்கள்.

அவர் உங்களிடம் ஏதேனும் கேட்டால், மரியாதை யுடன் கேள்விக்கு மட்டும் பதில் சொல்லுங்கள்.

தேவையில்லாமல் எதற்கும் விளக்கம் கொடுக்காதீர்கள். அவராகவே அனுமதி கொடுக்கும்வரை எதைப் பற்றியும் நீங்கள் பேசாமலிருப்பதே நல்லது.

பிரயாணத்தின்போது உணவு வகைகளைப் பற்றிப் பேசாதீர்கள், மனிதனுக்கு உணவு தேவைதான் என்றாலும், உணவு அவனுடைய குறிக்கோளல்ல. நல்ல மனிதர்களின் கல்லறைகளைச் சந்திக்கத் தவறாதீர்கள். நீங்கள் முகாமிடும் இடங்கள் ஒவ்வொன்றிலும், அங்குள்ள புனித சமாதிகளை விசாரித்துச் சென்று பாருங்கள்.

பிரயாணத்தில் இறைவனைப் பற்றிய எண்ணம் எப்போதும் உங்கள் நெஞ்சத்தில் நிலைத்து நிற்க வேண்டும். திருக்குர்ஆன் ஓதுவதையும் அலட்சியம் செய்துவிடாதீர்கள். மற்றவர்களுக்குத் தொந்தரவு ஏற்படாதவிதத்தில் திருக்குர்ஆன் ஓதுவது நல்லது. இயன்றவரை மெதுவான குரலில் ஓதுங்கள்.

இறைவனை நினைத்துக் கொண்டிருக்கும்போது மற்றவர்கள் பேசினால், அவர்களுக்கு முறைப்படி பதில் கொடுங்கள். அவர்களை அலட்சியம் செய்வதுபோல் நடந்து கொள்ளாதீர்கள். அவர்கள் தொடர்ந்து பேசினால் நீங்களும் தொடர்ந்து பதிலளியுங்கள். அவர்களின் உரையாடுதலை துண்டிக்க வேண்டிய அவசியமில்லை. அவர்கள் சென்றதும், நீங்கள் இறைத் தியானத்தில் ஈடுபடலாம். இதில் தவறு ஒன்றும் கிடையாது.

பிரயாணத்தின் நடுவே நல்ல மனிதர்களுக்குப் பணி புரியும் வாய்ப்புக் கிடைத்தால், அதனைத் தவறவிட்டு



விடாதீர்கள். பிரயாணத்தினால் கிடைக்கும் நன்மைகளில் இதுவும் ஒன்று என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். கிடைக்கும் நன்மைகளை அலட்சியம் செய்வது புத்திசாலிகளுக்கு அழகல்ல. நல்ல மனிதர்களுடன் பழகும் வாய்ப்புக் கிடைப்பது அரிதான ஒன்று. இதனை அலட்சியம் செய்வது அறிவுடைமைக்கு முற்றிலும் மாறுபட்டது; இஸ்லாமிய பிரயாணத்திற்கு முற்றிலும் முரண்பட்டது. இதனை நீங்கள் என்றைக்கும் மறந்துவிடக்கூடாது. மறக்கக்கூடாததை மறப்பது மனிதனுக்கு அழகல்ல.

# 4. தேவைப்படுபவை

பிரயாணத்திற்குத் துணிகிறவர்கள் முன்கூட்டியே பல வேலைகளைச் செய்யவேண்டியிருக்கிறது. பிரயாணச் சாமான்கள், வழிச் செலவுக்குத் தேவையான பணம் முதலியவை அத்தியாவசியமானவை. இவற்றைப் பொருட்படுத்தாமல் புறப்படுவதானால், நீங்கள் நான்குபேருடன் சேர்ந்து புறப்பட வேண்டும். தேவையான பொருள்கள் இல்லாமல் தனி மனிதனாகப் புறப்படுவது அவ்வளவு நல்லதல்ல.

இப்படித் தேவைப்படும் சாமான்கள் எதுவும் இல்லாமல் இறை நம்பிக்கையை மட்டும் ஆதாரமாகக் கொண்டு பிரயாணப்பட்டவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களுக்குப் பட்டினி கிடக்கத் தெரியும். ஒன்றும் கிடைக்காதபோது இலைகளைத் தின்று திருப்தியடைவதும் உண்டு. இத்தகையவர்கள் வெறுங்கையோடு பிரயாணப்படுவதால் தவறு ஒன்றும் கிடையாது. இப்படிப் பொறுமையோடு இருக்கும் ஆற்றல் இல்லாதவர்கள் வெறுங்கையோடு பிரயாணப் படுவது தவறு. ஏனெனில் இது வேண்டுமென்றே மரணத்தை வருந்தியழைப்பது போன்றதாகும்.

இதைப்பற்றி முழு விவரம் 'இறை நம்பிக்கை' எனும் நூலில் இடம் பெற்றிருக்கிறது, இறை நம்பிக்கையுள்ளவர் களுக்கு மேற்குறிப்பிட்ட சிரமங்கள் சாதரணமானவை.



இறைநம்பிக்கை என்றால், எவ்வித முன்னேற்பாடும் செய்யாமலிருப்பது என்று அர்த்தமல்ல. நமது முன்னோர் பிரயாணத்தின் போது வாளி, கயிறு, ஊசி, கத்திரிக்கோல் முதலியவற்றை எடுத்துச் சென்றிருக்கிறார்கள். எனவே வானத்திலிருந்து, வானவர் ஒருவர் குதித்து வந்து உதவி செய்யும்வரை காத்திருக்க வேண்டும் என்பது கிடையாது. சாப்பாட்டிற்குச் சிரமம் ஏற்படும் என்று தெரிந்தால், ரொட்டி முதலானவற்றை உடன் எடுத்துச் செல்வது தவறல்ல; இது இறை நம்பிக்கைக்கு முரண்பட்டதாகாது.

இந்த உண்மையை அறிஞர்களில் பெரும்பாலோர் இன்னும் சரியாகத் தெரிந்து கொள்ளவில்லை என்றே நான் நினைக்கிறேன்.

பிரயாணத்தின்போது கவனிக்க வேண்டிய பல சட் டங்கள் இருக்கின்றன. அவற்றை எல்லாம் நீங்கள் நன்கு தெரிந்துகொள்ள வேண்டும். இதுவும் பிரயாணத்தின் பகுதிகளில் மற்றொன்று. பிரயாணத்திற்குப் பணம் எவ் வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் இந்த அறிவு. இந்த அறிவை நீங்கள் முன்கூட்டியே உண்டாக்கிக் கொள்ளவில்லை என்றால், பிரயாணத்தின் நடுவே உங்களால் மார்க்கத்தைக் கடைப்பிடிக்க முடியாது.

மார்க்கத்தின் சட்டங்கள் உள்ளூரிலும், பிரயாணத் திலும் மாறுபடுகின்றன. இந்த மாறுபாடுகளையெல்லாம் நீங்கள் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டும்.

இப்போது நாம் பிரயாணத்திற்குரிய மார்க்கச் சட்டங்களை ஆராய்வோம்.

## 5. பிரயாணத்தில் சலுகை

இஸ்லாத்தில் பரிசுத்தத்திற்குப் பெரிதும் மதிப் புண்டு. இறை வணக்கத்திற்கு அது உயிர் போன்றது. இறை வணக்கங்கள் அத்தனைக்கும் அவசியமானது. பரிசுத்தம் என்றால் என்ன, அதனை எப்படி உண்டாக்கிக் கொள்வது என்னும் பிரச்சினைகள் எல்லாம் சட்ட நூல்களில் மிகத் தெளிவாக விளக்கப்பட்டிருக் கின்றன.

பிரயாணத்தின்போது குறுக்கிடும் துன்பங்களை உத்தேசித்து, பிரயாணிகளுக்கென்றே சில சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதனால் பரிசுத்தம் பற்றிய சட்டம் பிரயாணத்தில் சற்று மாறுபடுகிறது.

இறை வணக்கத்திற்காகச் சுத்தம் செய்து கொள்ள வேண்டியது அவசியமல்லவா? இந்த வகையில் கைகளை யும், கால்களையும் முறைப்படி கழுவிக் கொள்ள வேண்டும்.

பிரயாணிகளுக்கு இங்கு சலுகை கொடுக்கப்படுகிறது. ஒரு தடவை முறைப்படி கைகால்களைக் கழுவிக்



கொண்டு உறைகள் அணிந்துகொண்டால், அப்புறம் தண்ணீரைத் தொட்டு அவற்றின்மீது தடவிக் கொள்ளலாம். இது கழுவிக்கொள்வதற்கு நிகரான செயல் என்று மார்க்கம் சட்டம் போட்டு வைத்திருக்கிறது.

ஐங்காலத் தொழுகையிலும் இப்படியொரு சலுகையுண்டு. பிரயாணிகள் இரண்டு தொழுகைகளை ஒரே வேளையில் நிறைவேற்றிக் கொள்ளலாம்.

கட்டாயக் கடமைகளுக்கு அப்பாற்பட்ட தொழுகை களைப் பிரயாணிகள் நடந்து கொண்டும் நிறைவேற்ற லாம். ஒட்டகத்தில் உட்கார்ந்து கொண்டும் நிறை வேற்றலாம்.

இந்த வகையில் பிரயாணிகளுக்கு மார்க்கம் கொடுத் திருக்கும் சலுகைகளுக்கு சில நிபந்தனைகள் இருக் கின்றன. இங்கு நாம் இவற்றை முறைப்படி ஆராய வேண்டும்.

1. காலுறைகளை அணிகிறவர்கள், தண்ணீரைத் தொட்டு அவற்றின்மீது தடவிக் கொள்ளலாம் என்றும் அவர்கள் கழுவ வேண்டியதில்லை என்றும் நான் குறிப் பிட்டேனல்லவா? நீங்கள் இப்படி உறைகள் அணிவதற்கு முன்னர் முறைப்படி கைகளையும் கால்களையும் கழுவிக் கொள்ள வேண்டும். இமாம் ஷாபியீயின் கருத்துப்படி, எல்லா உறுப்புக்களையும் கழுவிய பிறகுதான் நீங்கள் உறைகளை அணியலாம். அப்போதுதான் இந்தச் சலுகை உங்களுக்குக் கிடைக்கும்.

இப்படி நீங்கள் அணிந்துகொண்டால், மூன்று நாட்கள் வரை காலுறைகள்மீதே தண்ணீர் தொட்டுத் தடவிக் கொள்ளலாம்.

2. நீங்கள் அணியும் உறைகள் கெட்டியானவையாக இருக்கவேண்டும். நடக்கும்போது தொல்லை தராதவை யாக இருக்க வேண்டும்.

3. ஒரு தடவை காலுறைகள் அணிந்துகொண்ட பின்னர் அவற்றைக் கழற்றக்கூடாது. கழற்றிவிட்டால் தண்ணீரைத் தொட்டுத் தடவிக்கொள்ள முடியாது; முறைப்படி கழுவ வேண்டும்.

4. காலுறைகளுக்குமேல் நீங்கள் தடவும்போது, எந்தப் பகுதியைக் கழுவவேண்டுமோ அந்தப் பகுதியில் தான் தண்ணீர் தொட்டுத் தடவ வேண்டும்.

காலுறைகள் மீது எப்படித் தடவ வேண்டும் என்பதைப் பெருமானார் (ஸல்) அவர்கள் விளக்கியிருக் கிறார்கள்.

''வலக்கரத்தைத் தண்ணீரில் நனைத்து அதன் விரல்களை வலக்காலின் விரல்மீது வைத்து மேல் நோக்கித் தடவ வேண்டும். காலுக்கு அடியில் இடக் கரத்தை வைத்து காலின் விரல்கள்வரை தடவ வேண்டும்...''

பரிசுத்தத்திற்குத் தேவையானது தண்ணீர். ஆனால் தண்ணீர் கிடைக்காதபோது மண்ணைப் பயன்படுத்திக் கொள்ளும் சலுகை பிரயாணிகளுக்கு உண்டு.

நீங்கள் தங்கியிருக்கும் இடத்திற்கும் தண்ணீர் இருக்கும் இடத்திற்கும் நீண்ட இடைவெளி இருப்பதாக வைத்துக்கொள்வோம். தண்ணீருக்காக நீங்கள் புறப் பட்டுச் சென்றுவிட்டால் அங்கு ஏற்படும் ஆபத்துகளில் உங்கள் பிரயாண நண்பர்களால் உதவமுடியாமற் போய்விடும் என்று உங்களுக்குத் தெரிகிறது.



இதுபோன்ற கட்டங்களில் நீங்கள் தாராளமாக மண்ணைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

தண்ணீர் இருக்கும் இடத்தை விரோதிகள் சூழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நீங்கள் தண்ணீருக்குச் சென்றால் உங்களுக்கு ஆபத்து ஏற்படும் என்று நன்றாகத் தெரிகிறது. இந்தக் கட்டத்திலும் உங்களுக்கு சலுகையுண்டு. தண்ணீர் இருக்கும் இடத்தில் விரோதிகள்தான் இருக்கவேண்டும் என்பது கிடையாது. அங்கு கொடிய வனவிலங்குகள் இருந்தாலும் அப்படித்தான். இதுபோன்ற குடில்களில் மேற்குறிப்பிட்ட நீர்த்தடாகம் அருகிலிருந்தாலும், உங்களுக்குச் சலுகையுண்டு. கைவசமிருக்கும் தண்ணீரை உபயோகப் படுத்திக்கொண்டால், அப்புறம் தாகத்திற்குத் தண்ணீர் இல்லாமற் போய்விடும் என்று நீங்கள் நம்பினால், மண்ணைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இதற்கும் அனுமதியுண்டு.

தண்ணீர் கிடைக்காததால் மண்ணை நம்பித் தொழு கையை நீங்கள் ஆரம்பித்துவிட்ட பின்னர், தண்ணீர் கிடைத்தால் உங்கள் தொழுகைக்குப் பாதகம் கிடையாது. தொழுகையை ஆரம்பிக்குமுன் தண்ணீர் கிடைத்தால், நீங்கள் தண்ணீரின் உதவியால் அவயங்களை முறைப்படி கழுவிக் கொள்ளத்தான் வேண்டும்.

இப்படித் தண்ணீரில்லாமல் மண் தரையை வைத்துப் பரிசுத்தம் தேடிக்கொள்வதை 'தயம்மும்' என்று அரபி மொழியில் குறிப்பிடுகிறார்கள். தண்ணீரினால் பரிசுத்தம் தேடிக்கொள்வதற்கு 'உலூ' என்று பெயர்.

ஒருதடவை நீங்கள் தயம்மும் செய்துகொண்டால், அதை வைத்து எல்லாத் தொழுகைகளையும் நிறைவேற்றி

விட முடியாது. ஆனால் ஒரு தடவை உலூ செய்து கொண்டால் அதை வைத்துப் பல தொழுகைகளை நிறைவேற்றலாம். இந்த வேற்றுமையை நீங்கள் நன்கு கவனித்துக்கொள்ளவேண்டும்.

காலைத் தொழுகைக்காக உலூ செய்த நீங்கள் அதை வைத்தே மத்தியானத் தொழுகையை நிறைவேற்றலாம். மாலைத் தொழுகைக்கென்று நீங்கள் செய்துகொண்ட உலூவை வைத்து இரவுத் தொழுகையை நிறை வேற்றலாம்.

என்றாலும், கட்டாயத் தொழுகை ஒன்றுக்காக நீங்கள் தயம்மும் செய்தால், அந்தக் கட்டாயத் தொழுகையையும் கட்டாயமற்ற பல தொழுகைகளையும் நிறைவேற்றலாம். ஆனால், மீண்டும் கட்டாயத் தொழுகை ஒன்றை நிறை வேற்றுவதானால் மேலும் ஒரு தடவை நீங்கள் தயம்மும் செய்துகொள்ள வேண்டும்.

எனவே, கட்டாயக் கடமையான இரண்டு தொழுகை களை நிறைவேற்றுவதானால் மேலும் இரண்டு தடவைகள் தயம்மும் செய்துகொள்ள வேண்டும். ஒரு தொழுகைக்குரிய நேரம் வருவதற்கு முன்னால் தயம்மும் செய்ய வேண்டியதில்லை; செய்யவும் கூடாது. இல்லை யேல் நேரம் வந்ததும் மீண்டும் தயம்மும் செய்ய வேண்டி ஏற்படும்.

மாலைத் தொழுகைக்குரிய நேரம் வருவதற்கு முன்னால் நீங்கள் தயம்மும் செய்து கொள்கிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். அந்த நேரம் வந்ததும் மீண்டும் ஒரு தடவை நீங்கள் தயம்மும் செய்து கொள்ள வேண்டும்.



சில உறுப்புக்களைக் கழுவுவதற்குப் போதுமான தண்ணீர் கிடைத்தால், அந்த உறுப்புக்களைக் கழுவிக் கொண்டபின்னர், எல்லா உறுப்புகளுக்கும் தயம்மும் செய்து கொள்ள வேண்டும்.

இரண்டு தொழுகைகளை ஒன்றாகச் சேர்த்து நிறை வேற்றும் சலுகை பிரயாணிகளுக்கு உண்டு எனக் கூறினே னல்லவா? இதைப் பற்றி இங்கு சிறிது ஆராய்ந்தால் நல்லது என்று நினைக்கிறேன். இரண்டு தொழுகைகளை ஒன்றாகச் சேர்ப்பதற்கு உரிமை இருப்பதுபோல், தொழுகையில் பகுதிகளைக் குறைத்துக்கொள்வதற்கும் உரிமையுண்டு. லுஹர், அஸர், இஷா ஆகிய தொழுகை களைப் பாதியாகக் குறைத்துக் கொள்ளலாம். இவை ஒவ்வொன்றும் நான்கு பகுதிகளை... 'ரக்அத்'துகளைக் கொண்டவை. அவற்றை இரண்டு ரக்அத்துகளாக்கிக் கொள்ளலாம்.

ஆனால் இப்படி குறைத்துக்கொள்வதற்குச் சில நிபந்தனைகள் இருக்கின்றன.

1. நீங்கள் சுருக்கிக்கொள்ள நினைக்கும் தொழு கையை அதற்குரிய வேளையில் நிறைவேற்ற வேண்டும். அடுத்த தொழுகைக்குரிய நேரம் வந்து விட்டால் முந்திய தொழுகையை முறைப்படி நிறை வேற்றுவது முக்கியம்.

2. உள்ளூர்வாசியான ஒருவரை நீங்கள் பின்பற்றக் கூடாது. அவரைப் பின்பற்றித் தொழுதால் நீங்கள் தொழுகையைச் சுருக்கிக்கொள்ள முடியாது; நீங்கள் தொழுகையில் பின்பற்றும் தலைவர் உள்ளூர்வாசியா, பிரயாணியா என்று தெரியாவிட்டால் தொழுகையை முறைப்படி நிறைவேற்ற வேண்டும்.

3. தொழுகையைச் சுருக்குவது குறித்து நீங்கள் தீர்மானம் செய்து கொள்ளவேண்டும். இதற்கு 'நிய்யத்' என்று பெயர். இந்த 'நிய்யத்' இல்லையேல் நீங்கள் தொழுகையைச் சுருக்கக்கூடாது.

இப்படித் தொழுகையைச் சுருக்குவது, சிரமம் தரக் கூடிய நீண்ட பிரயாணத்தில். இதனை நீங்கள் மறந்து விடக் கூடாது. அதே வேளையில் தற்போது மேற் கொள்ளப்படும் பிரயாணம் முற்றிலும் மாறுபட்டது என்பதையும் நாம் மறந்துவிடுவதற்கில்லை. அப்போது பிரயாணப்பட்டவர்கள் அனுபவித்த துன்பங்களில் பத்தில் ஒரு பகுதியைக்கூடத் தற்காலத்தில் பிரயாணப் படுகிறவர்கள் அனுபவிக்க வேண்டிய நிலைமை ஏற்படுவதில்லை. இது இந்த இடத்தில் கவனிக்க வேண்டிய முக்கியமானதொரு வேற்றுமை. எனவே இந்தப் பிரயாணங்கள் இரண்டையும் ஒரே நிலையில் வைத்துக் கவனிப்பது தவறு.

உள்ளூரை விட்டுப் புறப்படுகிறவர்கள் அனைவரை யும் பிரயாணிகள் என்று சொல்லிவிட முடியாது. குறிக்கோள் இல்லாமல் அலைந்து திரிகிறவர்களுக்குப் பிரயாணிகள் எனும் பெயர் பொருந்தாது. எனவே மேற்குறிப்பிட்ட சலுகைகளில் எதுவும் அவர்களுக்குக் கிடையாது.

அப்படியானால் யாரைத்தான் பிரயாணி என்று குறிப்பிட வேண்டும்.

இந்த வினாவுக்கு அந்தக் காலத்தில் வாழ்ந்த அறிஞர்களே விளக்கம் கொடுத்துவிட்டார்கள். உள்ளூரை விட்டு ஒரு எல்லையை நோக்கிப் புறப்படுகிறவனுக்குப் பிரயாணி என்று பெயர் என்பது அறிஞர்கள் கொடுத்



திருக்கும் விளக்கம். இப்படிப் புறப்படுகிறவர்கள் நகர எல்லையைக் கடந்தாக வேண்டும். இல்லையேல் இன்னும் அவர்கள் பிரயாணப்படவில்லை என்பதே பொருள். மக்கள் பொழுது போக்கக்கூடிய சோலை ஒன்று நகரத்திற்கு வெளியில் இருந்தால், அதனைக் கடந்துதான் ஆகவேண்டும் என்பது கிடையாது. வெளியூருக்குப் புறப்பட்ட ஒருவன், தான் மறந்து விட்ட ஒன்றை எடுத்துச் செல்வதற்காக உள்ளூருக்குத் திரும்பினால் அவனுக்குச் சலுகை கிடையாது. ஆனால் இந்தச் சம்பவம் வெளியூரில் ஏற்பட்டால் சலுகையுண்டு. ஏனெனில் பிரயாணத்தின் நடுவே ஓர் இடத்தில் தவறவிட்ட பொருளை எடுத்துச் செல்வதற்காக அந்த இடத்திற்குத் திரும்பி வருவது அந்தப் பிரயாணத்தில் ஒரு பகுதியாகும்.

இந்தப் பிரயாணம் எந்தக் கட்டத்தில் முடிவடைகிறது என்பதற்கும் அறிஞர்கள் விளக்கம் கொடுத்திருக் கிறார்கள். பிரயாணப்பட்ட ஒருவன் திரும்பி வரும்போது உள்ளூரின் எல்லையை அடைந்துவிட்டால், அப்போதே அவனுடைய பிரயாணம் முடிந்து போய்விடும். அப்புறம் அவன் பிரயாணச் சலுகைகளில் எதையும் அனுபவிக்க முடியாது. ஆனால் இந்தச் சலுகைகள் ரத்தாக வேண்டு மானால், அவன் உள்ளூருக்குத் திரும்பித்தான் ஆக வேண்டும் என்பது கிடையாது. பிரயாணத்தின் நடுவே அவன் ஏதேனும் ஓர் ஊரில் மூன்று நாட்களுக்குக் குறையாமல் தங்கத் தீர்மானித்தால், பிரயாணச் சலுகை கள் ரத்து செய்யப்படும். அவன் தங்கத் தீர்மானிக்கும் இடம் ஓர் ஊராகத்தான் இருக்கவேண்டும் என்றும் சொல்லமுடியாது. அது பாலைவனமாகக்கூட இருக் கலாம்.

மூன்று நாட்கள் தங்கவேண்டும் எனும் தீர்மானமில்லாமல் ஒருவன் ஓர் ஊருக்குள் செல்கிறான். அங்குள்ள வேலையை அன்றே முடித்துக்கொண்டு அன்றே புறப்பட்டுவிட வேண்டும் என்பது அவன் எண்ணம். ஆனால் அன்று அந்த வேலை முடியவில்லை. மறுநாள் நிச்சயமாக முடித்துவிடலாம் என்று அவன் நினைக்கிறான். மறுநாளும் அதே கதிதான். இப்படி எதிர்பாராத காரணங்களால் அவன் அங்கு இரண்டு, மூன்று நாட்கள் தங்கவேண்டி ஏற்படுகிறது.

இந்தக் கட்டத்தில் பிரயாணச் சலுகைகள் அனைத்தையும் அவன் அனுபவித்துக் கொள்ளலாம்.

மொத்தத்தில், நீங்கள் பிரயாணப்பட்டால் அதற்கு ஒரு காரணம் இருக்கவேண்டும். இது நேர்மையான காரணமாகவும் இருக்கவேண்டும். மார்க்கத்திற்கு எதிரான காரணங்களால் பிரயாணம் உருவாகக் கூடாது. இதற்கு அனுமதி கிடையாது. இப்படி நீங்கள் பிரயாணப்பட்டால் உங்கள் பிரயாணத்தைத் தீயசெயல் என்று துணிந்து கூறலாம், இத்தகைய பிரயாணங்களில் மார்க்கம் உங்களுக்கு நிச்சயமாக எந்தச் சலுகையும் கொடுக்காது. ஏனெனில் உங்கள் பிரயாணம் தீய நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. தீய நோக்கத்தை மார்க்கம் தடை செய்கிறது. அது மார்க்கத்திற்கு முரண் பட்ட ஒன்று. எனவே மார்க்கத்தின் சலுகையை உங்களால் இங்கு எதிர்பார்க்க முடியாது; எதிர்பார்க்கவும் கூடாது.

நல்ல நோக்கத்துடன் பிரயாணப்பட்ட ஒருவன் பிரயாணத்தின் நடுவே மார்க்கத்திற்கு முரண்பட்ட



வேலைகளைச் செய்வதாக வைத்துக்கொள்வோம். அவன் உள்ளூரிலிருந்தாலும் பிரயாணத்திலிருந்தாலும் இது தவறுதான். எனினும் இந்தத் தவற்றினால் பிரயாணச் சலுகைகளுக்குப் பாதகம் கிடையாது.

மெய்ஞ்ஞானிகள் சாதாரணமாகப் பிரயாணப்படுவதுண்டு. குறிப்பிட்ட ஓர் ஊரை நோக்கி அவர்கள் பிரயாணப்படுவதில்லை. மனம்போனபடி பிரயாணப்படும் அவர்கள், காணும் காட்சிகளில் எல்லாம் உண்மையைத் தேடுகிறார்கள். இப்படி எந்த ஊரையும் குறியாகக் கொள்ளாமல் பிரயாணப்படும் மெய்ஞ்ஞானிகளுக்குப் பிரயாணச் சலுகைகள் இருக்கின்றனவா? - இப்படி ஒரு வினா எழுப்பப்படுகிறது.

இதில் கருத்து வேற்றுமையுண்டு. என்றாலும் சலுகையுண்டு என்பதே ஆதாரபூர்வமான பதில்.

லுஹர், அஸர் ஆகிய இரண்டையும் ஒரே நேரத்தில் நிறைவேற்றிக் கொள்ளலாம். மக்ரிப், இஷா ஆகிய இரண்டையும் ஒன்றாகச் சேர்த்துக் கொள்ளலாம். நீண்ட பிரயாணத்தில் இந்தச் சலுகை உங்களுக்கு உண்டு.

குறுகிய பிரயாணத்தின் போது சலுகை இருக்கிறதா, இல்லையா என்பது பற்றிக் கருத்துவேற்றுமையுண்டு. இந்த விதத்தில் இரண்டுவிதமான கருத்துக்கள் காணப்படுகின்றன. இவற்றை எல்லாம் நீங்கள் சட்ட நூல்களில் காணலாம்.

இதன்படி கட்டாயத் தொழுகைகள் இரண்டை நிறைவேற்றியதும் அவற்றிற்குரிய ''சுன்னத்து''த் தொழுகைகளை நிறைவேற்றுங்கள்.

பிரயாணத்தின் போது 'நஃப்ல்' தொழுகைகளை விட்டுவிட வேண்டும் என்பது கிடையாது. அவற்றினால் நீங்கள் பயன்பெறக்கூடும். உங்கள் வாகனத்தில் இருந்த படியே அவற்றை நிறைவேற்றுவதற்கு அனுமதியுண்டு.

பிரயாணத்தின் போது நீங்கள் அயர்ந்து தூங்கு கிறீர்கள். இதனால் லுஹருக்குரிய நேரம் கழிந்துபோய் விட்டது. இந்தக் கட்டத்தில் லுஹரை அஸருடன் சேர்த்து நிறைவேற்றிக் கொள்ளலாம். அதிக வேலையினால் நேரம் பிந்தினாலும் இப்படிச் சேர்த்துத் தொழுது கொள்ளலாம். இதனால் எந்தத் தவறும் உருவாகப் போவதில்லை. இப்படித் தொழுகையை மறப்பது தவறு என்று வாதிப்பதற்கு இடமில்லை. தொழ முடியாத சூழலை ஏற்படுத்தும் பிரயாணம், தொழுகையை நினைத்துப் பார்க்க முடியாத சூழலையும் ஏற்படுத்துகிறது. எனவே பிரயாணி குற்றவாளியல்ல.

அஸர் தொழுகைக்கு முன்னால் லுஹர் தொழுகையை நிறைவேற்றாதீர்கள். இதனால் லுஹர் தொழுகையை நிறைவேற்றும்போது சோம்பறித்தனம் ஏற்படலாம்.

ஓயாத மழையினாலும் சலுகை கிடைக்கிறது. இப்படி மழை பெய்தால் சேர்த்துத் தொழுவதற்குரிய சலுகையை நீங்கள் பெறலாம்.

பிரயாணிகளுக்கு மற்றொரு சலுகையுண்டு; அவர் 'ஜும்ஆ'த் தொழுகையைக்கூட விட்டுவிடலாம். இதற்குரிய விரிவான சட்டங்களுக்குச் சட்ட நூல்களே தகுதியுள்ளவை.

ஏற்கனவே நான் குறிப்பிட்டதுபோல் 'நஃப்ல்' தொழுகைகளை வாகனத்தில் இருந்தபடியே நீங்கள் நிறைவேற்றிக் கொள்ளலாம். பெருமானார் (ஸல்) அவர்கள் இதற்கு முன்னோடியாகச் சென்றிருக்கிறார்கள். அவர்கள் ஏறிச் சென்ற வாகனத்தின் முகம் எந்தப் பக்கம் இருந்தாலும் அங்கேயே அவர்கள் 'நஃப்ல்' தொழுகைகளை நிறை வேற்றி முடித்திருக்கிறார்கள். 'வித்ரு'த் தொழுகையைக் கூட அவர்கள் இப்படி நிறை வேற்றியதுண்டு.



நீங்கள் இப்படித்தொழ முற்படும்போது குனிவது, சிரத்தைக் கீழே வைப்பது முதலான செயல்கள் மாறுபடும். அப்போது நீங்கள் சைக்கினை செய்து கொள்ளலாம். முறைப்படி குனிய வேண்டியதில்லை, சிரத்தை கீழே வைப்பதற்கும் உங்கள் பிரயாண வாகனம் வசதி கொடுத்தால் நீங்கள் முறைப்படி தொழலாம். வசதியில்லாதபோது மேற்குறிப்பிட்ட சலுகை உங்களுக்கு நிச்சயமாக உண்டு.

தொழுகையின்போது மக்காவின் தேவாலயத் திசையை முன்னோக்குவது தொழுகையின் பகுதிகளில் ஒன்று. தொழுகையின் ஆரம்பத்திலிருந்து முடிவுவரை உங்கள் முகம் அந்தத் திசையில்தான் இருக்க வேண்டும் என்று உங்களுக்குத் தெரியும். இது தவிர்க்க முடியாத ஒன்று.

ஆனால் பிரயாணிகளுக்கு இதிலும் சலுகையுண்டு. தொழுகையின் ஆரம்பத்திலிருந்து இறுதி வரை அவர்களின் முகம் தேவாலயத் திசையில்தான் இருக்க வேண்டும் என்று சொல்ல முடியாது. வாகனங்களில் இருந்தபடியே தொழுகிறவர்களுக்கு இது அசாத்திய மாகும். ஏனெனில் வாகனத்தின் முகம் நேரத்திற்கு நேரம் மாறுகிறது.

எனவே, தொழுகையின் ஆரம்பத்தில் மட்டும் நீங்கள் தேவாலயத் திசையை முன்னோக்கினால் போதுமானது. அப்புறம் உங்கள் வாகனம் எந்தத் திசையில் முன்னேறினாலும் நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை. தொழுகையின் ஆரம்பத்தில் நீங்கள் தேவாலயத்தை முன்னோக்கித்தான் ஆக வேண்டும் என்றும் சொல்வதற்கில்லை, உங்கள் வாகனம் எந்தத் திசையில், செல்கிறதோ அந்தத் திசையை முன்னோக்கி இறைவனை வணங்கலாம். திசைக்குக் கட்டுப்படாத அவன் எங்கும் நிறைந்திருக்கிறான்.

இப்படி உங்கள் வாகனத்தின் திசையை முன்னோக்கித் தொழும் போது உங்கள் வாகனம் பாதையை விட்டுத் திரும்பினால் உங்கள் வணக்கம் துண்டிக்கப்படும். மீண்டும் அதனை நீங்கள் நிறைவேற்ற வேண்டும். எனவே வாகனத்தில் இருந்தபடியே நீங்கள் தொழுவதானால், உங்கள் வாகனத்தை ஒரு திசையில் செலுத்துங்கள். வேண்டுமென்றே ஒரு திசையிலிருந்து மறு திசைக்குத் திருப்பாதீர்கள்.

ஆனால், வாகனத்தின் திசையை முன்னோக்கித் தொழும் நீங்கள் உங்கள் வாகனத்தை மக்காவின் பக்கம் திருப்பினால் உங்கள் தொழுகைக்குப் பாதகம் கிடையாது.

நடந்தே பிரயாணம் செய்கிறவர்களும் சைக்கிளை மூலம் 'நஃப்ல்' தொழுகைகளை நிறைவேற்றிக் கொள்ளலாம். ஏனெனில், பிரயாணிகள் எனும் பெயர் இவர்களுக்கு நிச்சயமாகப் பொருந்தும். என்றாலும், இவர்கள் தேவாலயத் திசையை முன்னோக்கித்தான் தொழுகையை



ஆரம்பிக்க வேண்டும். இவர்கள் வேண்டுமென்றே அசுத்தமான பகுதிகளில் நடந்து செல்லக் கூடாது. அப்படி வேண்டுமென்றே அசுத்தமான பகுதிகளில் நடந்தால் தொழுகை நிறைவேறாது.

பிரயாணிகள் நோன்பை ஒத்திப் போடுவதற்கும் சலுகையுண்டு. என்றாலும் நோன்பு பிடிப்பதே சிறந்தது. இதைப் பற்றிய விரிவான சட்டங்களை நீங்கள் சட்ட நூல்களில் காணலாம். நோன்பு பிடிப்பதால் உங்களுக்குத் துன்பம் ஏற்படும் என்று தெரிந்தால் நோன்பை விட்டு விடலாம்.

மேற்குறிப்பிட்ட சலுகைகளில் சில, நீண்ட பிரயாணத்தில் கிடைக்கின்றன. வேறு சில குறுகிய பிரயாணத்திலும் கிடைக்கின்றன.

''இந்தச் சட்டங்களை எல்லாம் முறைப்படி தெரிந்து கொள்வது பிரயாணிக்கு அவசியமா'' என்று நீங்கள் கேட்கலாம். பிரயாணப்படுகிறவர்களின் மனநிலையைப் பொறுத்து இந்தச் சட்டம் மாறுபடும். பிரயாணத்திற்குத் துணிந்திருக்கும் நீங்கள், பிரயாணச் சலுகைகள் எதையும் அனுபவிப்பதில்லை என்று தீர்மானித்தால், மேற்குறிப்பிட்ட சட்டங்களை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை.

இந்தச் சலுகைகளை நீங்கள் அனுபவித்துக் கொள்ளலாம் என்றாலும், அனுபவித்துத்தான் ஆக வேண்டும் என்று சொல்ல முடியாது. எனவே அவற்றை விட்டுவிடுவதற்கும் அனுமதியுண்டு. ஆனால் அவற்றைப் புறக்கணிப்பதற்கு மனவலிமை தேவை. தானாகக் கிடைக்கும் சலுகையைப் பெரும்பாலோர் புறக்கணிப்பதில்லை.

மேற்குறிப்பிட்ட சலுகைகளை அனுபவிக்கத் தீர்மானித்தால், அவற்றிற்குரிய சட்டங்களை நீங்கள் தெரிந்துகொள்ளத்தான் வேண்டும்.

'தயம்மும்' பற்றிய சட்டங்கள் மிக முக்கியமானவை. பிரயாணத்தின் போது தண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்படக் கூடும். ஆனால் கடலோரமாகவோ, ஆற்றோரமாகவோ நீங்கள் பிரயாணம் செய்வதாயிருந்தால் இந்தச் சட்டங்களை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டியதில்லை.

நீங்கள் பிரயாணப்படும்போது மார்க்க அறிஞர் ஒருவரும் உங்களுடன் வருகிறார் என்று வைத்துக் கொள்வோம். குறுக்கிடும் பிரச்சினைகளுக்குத் தெளிவாகத் தீர்ப்பு வழங்கும் திறமை அவருக்கு உண்டு என்று நீங்கள் நம்புகிறீர்கள். இந்தக் கட்டத்தில் அந்த மார்க்க அறிஞரை நம்பிப் பிரயாணப்படலாம். அவர் தெரிந்திருப்பது உங்களுக்குப் பயன்படக்கூடும்.

மார்க்க அறிஞரின் துணையின்றிப் புறப்படும் நீங்கள் தண்ணீர் கிடைக்குமா, கிடைக்காதா என்று குழம்பினால், 'தயம்மும்' பற்றிய சட்டங்களைத் தெரிந்து கொள்ளத் தான் வேண்டும். தண்ணீர் கிடைக்காதபோது, 'தயம்மும்' பயன்படும்.

நீங்கள் கேட்கலாம்: குறிப்பிட்டதொரு தொழுகைக் குரிய நேரம் வந்த பிறகுதான் அந்தத் தொழுகைக்காகத் தயம்மும் செய்யவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. நேரம் வந்த பிறகுதான் இந்த அவசியம் உருவாகிறது. எனவே இன்னும் கடமையாகாத ஒரு தொழுகையைப் பற்றியோ அதற்கென்று எப்படிப் பரிசுத்தம் தேடிக் கொள்ள வேண்டும் என்பது பற்றியோ தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம் என்ன?



நீண்ட வாக்குவாதத்திற்கு வகை செய்யக் கூடியது உங்கள் வினா. நீங்கள் மக்காவிற்குப் புறப்படுகிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். நீங்கள் இருக்கும் இடத் திற்கும் மக்காவிற்குமிடையில் நீண்ட இடைவெளி யுண்டு. எத்தனை நாட்களில் உங்களால் மக்காவை அடைய முடியும் என்பது, உங்கள் இல்லத்திற்கும் மக்காவிற்குமுள்ள தூரத்தைப் பொறுத்துத் தீர்மானிக்க வேண்டிய ஒன்று. இந்தப் பிரயாணத்தை எப்போது மேற்கொள்கிறீர்களோ அப்போதே அந்தப் புனிதக் காரியத்திற்குத் தயாராகிவிட்டீர்கள் என்பதே பொருள்.

உங்கள் வீட்டிற்கும் மக்காவிற்குமிடையே ஓராண்டு காலம் கடந்து செல்லவேண்டிய தூரம் இருப்பதாக வைத்துக் கொண்டால், 'ஹஜ்ஜு'க்குரிய மாதம் வரு வதற்கு முன்பே நீங்கள் பிரயாணப்பட்டாக வேண்டும். எனவே இந்த வழியில் நீங்கள் என்னென்ன செய்ய வேண்டும். எப்படி எப்படிச் செய்யவேண்டும் என்பன போன்ற விஷயங்களை முன்கூட்டியே தெரிந்துகொள் ளத்தான் வேண்டும். பிரயாணத்தின் நடுவே உங்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை விளக்குவதற்குத் தகுந்த அறிஞர் கிடைப்பது சிரமம்.

ஆகவே பின்னால் நடக்கப்போகும் ஒன்றுக்காக முற்கூட்டியே தயாராயிருப்பது நல்லது. இதுவே அறிவுடைமை.

பிரயாணச் சட்டங்களை முறைப்படி தெரிந்து கொள்ளாதவர்கள் பிரயாணப்படுவது நல்லதல்ல. இந்தப்

பிரயாணம் உரிய பயனை உருவாக்காது. அத்துடன், பிரயாணச் சலுகைகளை அனுபவிக்க எண்ணுகிறவர்கள் அவற்றிற்குரிய சட்டங்களை முன்கூட்டியே தெரிந்து கொள்ளத்தான் வேண்டும்.

இவற்றைத் தெரிந்து கொள்ளாமல் நீங்கள் பிரயாணப் பட்டால், தெரிந்தோ தெரியாமலோ, வரம்பைக் கடந்துவிடக்கூடும். பிரயாணத்தை அடிப்படையாகக் கொண்டு இஸ்லாத்தை இடிப்பதற்கு அனுமதியில்லை. இது அறிவுடைமையும் அல்ல.

எந்த அளவுக்குச் சலுகைகள் உண்டு என்று தெரிந்து கொண்டால்தான் அந்த அளவுடன் உங்களால் நிறுத்திக் கொள்ள முடியும்.

எனவே, பிரயாணத்தில் தோன்றும் பிரச்சினைகள் அத்தனைக்கும் நீங்கள் முன்கூட்டியே தீர்வு கண்டு கொள்ளத்தான் வேண்டும். பிரயாணத்தின்போது பார்த்துக் கொள்ளலாம் என்று நீங்கள் இருந்துவிடக் கூடாது. ஏனெனில் பிரயாணத்தில் பல தொல்லைகள் இருக்கின்றன. நீங்கள் எதிர்பார்க்கும் சூழல் உருவாகாமலும் போகலாம்.

தவிர, பிரயாணத்தை அடிப்படையாக வைத்துத் தொழுகையைப் புறக்கணிப்பதற்கு இடமில்லை. சேர்த்துத் தொழுவதற்கும், சைக்கினை காட்டித் தொழுவதற்கும் அனுமதி இருந்தாலும், தொழுகையைக் கட்டோடு புறக்கணிப்பதற்குக் கண்டிப்பாய் இடம் கிடையாது. எப்படியாவது நீங்கள் தொழுகையை நிறைவேற்றித்தான் ஆகவேண்டும்.



எனவே, எப்படி எப்படித் தொழலாம். தொழுகையில் என்னென்ன சலுகைகள் இருக்கின்றன. தேவாலயத் திசையை முன்னோக்குவது சம்பந்தமாக என்னென்ன சட்டங்கள் இருக்கின்றன என்ற விவரங்களை எல்லாம் தெரிந்துகொள்ளத்தான் வேண்டும். இது தவிர்க்க முடியாததொரு வேலை.

# 6. பிரயாணத்தில் குறுக்கீடு

பிரயாணத்தில் ஒன்றின்பின் ஒன்றாகப் பல பிரச்சினைகள் குறுக்கிடுவதால்தான் பிரயாணங்களுக்குச் சலுகைகள் கொடுக்கப்படுகின்றன. பிரயாணத்திலுள்ள தொல்லைகள் குறைந்தால் பிரயாணச் சலுகைகளும் குறையும். உங்கள் பிரயாணத்தில் எவ்விதத் தொல்லையும் கிடையாது என்றால், உள்ளூருக்கும் வெளியூருக்குமிடையில் வேற்றுமை கிடையாது. எனவே உங்களுக்குச் சலுகை கிடைக்காது.

என்றைக்கும் மறக்காமல் செயல்படுத்த வேண்டிய வேலை ஒன்று உண்டென்றால், அது தொழுகைதான். ஒவ்வொரு தொழுகைக்கும் குறிப்பிட்டதொரு நேரமுண்டு; தொழுகையின்போது முன்னோக்குவதற்கென்று ஒரு திசையுண்டு. எனவே, பிரயாணத்தின் போது மக்காவின் திசையைப் பற்றியும் தொழுகைக்குரிய நேரத்தைப் பற்றியும் நீங்கள் விரிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும்.

உள்ளூரைப் பொறுத்தமட்டில் இந்தப் பிரச்சினைகள் அதிகமாகத் தொல்லை தருவதில்லை. தேவாலயத் திசையை மக்கள் நிர்ணயித்தே வைத்திருக்கிறார்கள்;



ஒவ்வொரு தொழுகைக்கும் உரிய காலத்தில் அழைப்புக் கொடுக்கிறார்கள்.

இந்த வசதிகளை பிரயாணத்தில் எதிர்பார்க்க முடியாது. மலைகளையும், வனங்களையும், பாலைகளையும் கடந்து செல்லும் உங்களுக்கு தேவலாயத் திசை எது என்றே தெரியாமற் போகலாம்; மேகம் சூழ்ந்த வேளைகளில் தொழுகைக்குரிய நேரம் தெரியாமற் போகலாம். உங்களோடு பிரயாணம் செய்கிறவர்கள் உங்களுக்கு உதவுவார்கள் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. உங்களைப் போல் அவர்களும் குழப்பத்தில் சிக்கியிருக்கக்கூடும்.

தேவாலயத் திசையைத் தெரிந்துகொள்வது உள்ளூரிலும் அவசியம்தான். ஆனால் உள்ளூரைப் பொறுத்தமட்டில் எல்லோரும் தேவாலயத் திசையைத் தெரிந்துதான் வைத்திருப்பார்கள். தவிர, பள்ளிவாசலின் அமைப்பைப் பார்த்தே இதனைத் தெரிந்துகொண்டு விடலாம்.

மேலே நான் குறிப்பிட்டதுபோல், பிரயாணிகளுக்கு தேவாலயத் திசையில் சில வேளை சந்தேகம் தோன்றுவதுண்டு. மேற்குறிப்பிட்ட தொழுகைக்குரிய நேரம் வந்துவிட்டதா, இல்லையா என்று குழப்பம் ஏற்படுவதுண்டு.

தேவாலயத் திசையைக் கண்டு பிடிப்பது எது?

இதற்கு பல வழிகள் இருக்கின்றன. சில இடங்களில் மேற்குத் திசையை வைத்துத் தீர்மானிக்கிறார்கள். இது எல்லா இடத்திற்கும் பொருத்தமானதல்ல. மக்காவிற்குக் கிழக்கேயுள்ளவர்கள் மேற்குத் திசையை நிர்ணயித்துக்

கொள்வதுபோல், மக்காவிற்கு மேற்கேயுள்ளவர்கள் கிழக்குத் திசையை நிர்ணயித்துக் கொள்கிறார்கள். இது போலவே, வடக்குத் திசையையும் தெற்குத் திசையையும் சில இடங்களில் நிர்ணயித்து வைத்திருக்கிறார்கள்.

எனவே குறிப்பிட்ட ஒரு திசையை எல்லா இடத்திலும் தேவாலயத் திசையாக வைத்துக்கொள்ள முடியாது.

வேறு சிலர் தூரத்திலுள்ள மலையை ஆதாரமாக வைத்துத் தம் பிரச்சினைக்கு முடிவு காண்கிறார்கள். இதுவும் நிச்சயமானதல்ல. அந்த மலையின் திசையில் தான் தேவாலயம் இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அந்த மலையைக் கடந்துவிட்டால், உங்கள் தீர்மானம் மாறுபட்டுப் போய்விடும். மலைக்கு முன்னாலிருப்பவர்கள் மலையின் திசையைப் பார்த்தால், மலைக்குப் பின்னாலிருப்பவர்கள் எதிர்த்த திசையைப் பார்ப்பார்கள்.

இப்படி வேறுபாடு ஏற்படுவது தவிர்க்க முடியாத ஒன்று. எனவே இந்தப் பிரச்சினையில் பிரயாணத்தின் போது உங்களுக்குத் தெளிவு இருக்கத்தான் வேண்டும். தொழுகை எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கிய மானது தேவாலயத் திசையை தெரிந்து கொள்வது. இந்த இரண்டில் எதையும் நீங்கள் அலட்சியம் செய்துவிட முடியாது. அத்தியாவசியக் கடமைகளை அலட்சியம் செய்வது புத்திசாலிகளுக்கு அழகல்ல; பிரயாணத்தின் போது எந்தச் சலுகை இருந்தாலும், கடமையைக் கட்டோடு புறக்கணிப்பதற்குக் கண்டிப்பாய்ச் சலுகை கிடையாது.



எனவே எந்தத் திசையில் தேவாலயம் இருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்வது பிரயாணத்தின் போது சிரமமாகப் படக்கூடும். இது வரையறுத்துக்கூற முடியாத ஒரு விஷயம்.

தொழுகைக்குரிய நேரத்தைத் தெரிந்துகொள்வதற்கு சூரியனின் இயக்கத்தைக் கவனிப்பது சர்வ சாதாரணமாக எங்கும் காணப்படும் ஒன்று. சூரியன் உச்சியிலிருந்து சிறிது சாய்ந்ததும், 'லுஹர்' தொழுகைக்குரிய நேரம் வந்துவிட்டது என்று கணிக்கப்படுகிறது. அசர் தொழுகை யும் மக்ரிப் தொழுகையும் இதேவிதமாகவே நிர்ணயிக்கப் படுகின்றன.

ஆனால் பிரயாணிகளுக்கு இங்கும் சிறிது தொல்லை ஏற்படத்தான் செய்கிறது. கோடை காலத்திற்கும் மழை காலத்திற்குமிடையில் வேற்றுமையுண்டு. பிரயாணத்தின் போது சூழ்நிலை எப்படி மாறும் என்பதை யாராலும் முன்கூட்டியே தீர்மானித்துவிட முடியாது.

நீங்கள் பிரயாணப்படும்போது இப்படி நடந்து கொள்ளுங்கள். சூரியன் உச்சியிலிருந்து சாயத் தொடுத்த சிறிது நேரத்திற்கெல்லாம் நீங்கள் லுஹர் தொழுகையை நிறைவேற்றலாம்.

அப்புறம், வெய்யிலில் நின்றுகொண்டு உங்கள் நிழலைப் பாருங்கள். அது இரட்டிப்பாக நீண்டுவிட்டால் நீங்கள் அசர் தொழுகையை நிறைவேற்றலாம். இது இமாம் ஷாபீயின் கருத்து.

சூரியன் அஸ்தமித்ததும் மக்ரிப் தொழுகைக்குரிய நேரம் வருகிறது. இதனை நீங்கள் சிரமமில்லாமல்

தெரிந்துகொண்டு விடலாம். சூரியன் எப்போது அஸ்தமிக்கிறது என்று யாரும் உங்களுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டியதில்லை.

சூரியன் அஸ்தமித்ததும் மேற்கு வானத்தில் செந்நிறம் தெரிகிறதல்லவா? அந்தச் செந்நிறம் மறைந்ததும் இஷாத் தொழுகைக்குரிய நேரம் வந்துவிட்டது என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

கிழக்கு வானத்தில் மெல்லிய ஒளி ரேகை படரத் தொடுத்ததும் காலைத் தொழுகைக்குரிய நேரம் வருகிறது.

நீங்கள் இந்த அளவிற்குத் தெரிந்துகொண்டால் போது மானது என்று நான் நினைக்கிறேன். இந்தப் பிரச்சினை களை இந்த நூலில் இதற்குமேல் விளக்க முடியாது. இதில் நீங்கள் திருப்தியடையவில்லை என்றால், சட்ட நூல்களைத் தவிர்த்து வேறு எதுவும் உங்களைத் திருப்திப்படுத்த முடியாது. எனவே விரிவான சட்ட நூல்களை எடுத்துப் படித்துப் பாருங்கள்.

நான் ஆரம்பத்தில் குறிப்பிட்டதுபோல், பிரயாணம் இருவகைப்படும். அதில் ஒன்று, ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் செல்லும் பிரயாணம். மற்றொன்று, தாழ்ந்த நிலையிலிருந்து உயர்ந்த நிலைக்குச் செல்லும் உயிரின் பிரயாணம். முந்தியது உடலின் பிரயாணம் என்று அழைக்கப்படுகிறது. பிந்தியதை ஆத்மீகப் பிரயாணம் என்று நாம் குறிப்பிடுகிறோம்.

ஆனால் உடலின் பிரயாணத்திலும் ஆத்மீகம் கலந்து நிற்க வேண்டும் என்பது இஸ்லாத்தின் தீர்ப்பு. இந்தப்



புனித நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டுதான் முஸ்லிம்கள் பிரயாணப்பட வேண்டும் என்பது இறைவனின் தீர்ப்பு.

எனவே பிரயாணத்தின்போது இறைவணக்கத்தைப் புறக்கணிப்பதற்கு இடமில்லை. தவிர்க்க முடியாத தொல்லைகள் ஏற்பட்டாலும் குறிப்பிட்ட தொழுகை களைச் சுருக்கியேனும் தொழுது கொள்ளத்தான் வேண்டும்.

இந்தக் குறிக்கோளை மனத்தில் கொண்டு நீங்கள் பிரயாணப்பட்டால், பிரயாணத்திற்குரிய சட்டங்களை நீங்கள் தெரிந்து கொள்ளத்தான் வேண்டும். இது தவிர்க்க முடியாததொரு தேவை. இதனைப் புறக்கணிப்பதற்குரிய உரிமை எவருக்கும் கிடையாது.

நல்லெண்ணத்துடன் பிரயாணம் செய்த நமது முன்னோர் இப்படித்தான் நடந்து கொண்டார்கள். அவர்கள் எந்த நேரமும் இறைவனைப் பற்றியே எண்ணி னார்கள்; தமது பொறுப்புக்களை முறைப்படி நிறை வேற்றினார்கள். பிரயாணத்தின் போது குறிக்கிடும் பிரச்சினைகள் அத்தனைக்கும் முன்கூட்டியே தீர்வு கண்ட பிறகுதான் அவர்கள் பிரயாணப்பட்டார்கள்.

எனவே தான், பிரயாணத்திற்குரிய சட்டங்களைத் தெரிந்து கொண்ட பிறகுதான் நீங்கள் பிரயாணப்பட வேண்டும் என்று நான் கூறுகிறேன்.

மேலே நான் பல தடவைகள் குறிப்பிட்டது போல், பிரயாணத்தில் குறுக்கிடும் பிரச்சினைகளில் தொழுகைக் குரிய நேரத்தைத் தெரிந்துகொள்வதும், தேவாலயத்

திசையை உணர்ந்து கொள்வதும் மிக முக்கியமானவை. இவற்றைத் தவிர்த்து இன்னும் தொல்லைகள் பிரயாணத்தில் குறுக்கிடுகின்றன.

அவற்றை எல்லாம் முறைப்படி தெரிந்துகொள்ளாமல் நீங்கள் பிரயாணப்பட்டால் உங்களால் பிரயாணத்தின் நடுவே இஸ்லாமியச் சட்டங்களை அனுசரித்து நடந்துகொள்ள முடியாது.

பிரயாணிகளில் சிலர் முஸ்லிம்கள் வாழும் பகுதி களைக் கடந்து செல்கிறார்கள். அங்கேயே பள்ளி வாசல்கள் தென்படுகின்றன; பாங்கொலி கேட்கிறது. இது போன்ற கட்டங்களில் மேற்குறிப்பிட்ட அடிப்படை பிரச்சினைகளில் எத்தகைய குழப்பமும் உருவாக முடியாது. பள்ளிவாசலின் அமைப்பை வைத்துத் தேவால யத் திசையைத் தெரிந்துகொள்ளலாம்; பாங்கொலியை ஆதாரமாக வைத்துத் தொழுகைக்குரிய நேரத்தைத் தெரிந்து கொள்ளலாம்.

இப்படி பிரயாணம் செய்கிறவர்கள், தொழுகைக் குரிய நேரத்தை அறிந்து கொள்வது எப்படி, தேவாலயத் திசையைத் தெரிந்து கொள்வது எப்படி என்று குழம்ப வேண்டியதில்லை. இவற்றைப் பற்றிய சட்டம் எதையும் தெரிந்து கொள்ளாமல் இவர்கள் பிரயாணப்படலாம்.

வேறு சிலர் காடுகளையும் மலைகளையும் கடந்து பிரயாணம் செய்கிறார்கள். இவர்களுக்குப் பிரயாணத்தின் நடுவே எந்தப் பள்ளிவாசலும் குறுக்கிடப் போவதில்லை. பள்ளிவாசலே இல்லாதபோது பாங்கொலியைக் கற்பனை செய்வது சிறிது சிரமமானது.



எனவே, இவர்கள் தேவையான விவரங்களைத் தெரிந்து கொள்ளாமல் பிரயாணப்படக் கூடாது. இல்லை யேல் இஸ்லாத்தின் கட்டளைகளை அவர்கள் முறைப்படி மதிக்கவில்லை என்பதே பொருள். இப்படிப் பிரயாணப் படுகிறவர்களைக் குற்றவாளிகள் என்று துணிந்து கூறலாம்.

எங்கும் நிறைந்தவனும் எல்லாம் தெரிந்தவனும் இறைவன் ஒருவனே.